# அகத்தியர் திரட்டும்
# அருட்பா மாலையும்



அன்னை

## அமரர் திருமதி குமாரவேலு மகேஸ்வரி

அவர்களின் ஞாபகார்த்த வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11.04.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7/800/878

உ

சிவமயம்



# விநாயகர் வணக்கம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மண்மகிழ
13 – 03 – 1921

கண்நெகிழ
03 – 03 – 2004

அமரர்

# திருமதி குமாரவேலு மகேஸ்வரி

## திதி வெண்பா

பொங்கு சுபானு மாசி பூர்வத் துவாதசியில்
மங்கு பகற்பொழுது மாலைதனில் – பங்கமின்றி
பான்மையுடன் வாழ்ந்திட்ட மகேஸ்வரியாள் நாகம்மை
தேன் பருகப் பதமடைந்தாள் தேர்ந்து.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



மண் மகிழ
01.05.1921

கண் நெகிழ
07.08.1962

அமரர்

# உயர் திரு. சரவணமுத்து குமாரவேலு

(வைத்திய கலாநிதி)

## திதி நிருணய வெண்பா

சீர்கொண்ட சுபகிருது சிறந்தவை காசிதன்னில்
பூர்வத்தில் பூத்திட்ட பஞ்சமியில் – மருத்துவத்தில்
பண்டிதனாய்ப் பேர்பெற்ற குமாரவேலு கோமகனும்
அண்டினார் அரன்கழலென் றறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்



ஈரவிழிகளுடன் எம் இதயத் தெய்வங்களான தாய்,
தந்தையரை ஒரு கணம் எண்ணிப் பார்க்கிறோம்.
இதயங்கள் கனக்கின்றன எழுத முடியவில்லை.
நெஞ்சின் துயரச் சுவடுகளும்,
கண்களின் உதிரிப் பூக்களும்
உங்கள் பாதக் கமலங்களை அர்ச்சிக்கின்றன.
எங்கள் பாதங்கள் பூமியில் ஈரத்தோடு பதிகின்றன.
உங்கள் விழிகள் விழித்திருந்த போது
எங்கள் வாழ்வு மலர்ந்தன – விரிந்தன
மணம் வீசின – நாம் நிம்மதியாக உறங்கினோம்
எங்கள் விழிகள் விழித்தெழுந்த போது
உங்கள் விழிகள் உறங்கிவிட்டனவே.
நீங்கள் திரியாய் எரிந்து ஒளி தந்தீர்கள்
எங்கள் குடும்ப விளக்கு பிரகாசித்தது
உங்கள் யாகத்திற்கு அர்த்தம் காண
எம்மிடம் அகராதிகளோயில்லை...............
எங்கள் வாழ்விற்கு அர்த்தம் காட்டும்
அகராதிகள் நீங்களே..........
நீங்கள் மனிதர்களே அல்ல – எம்
இதயத்துக் கோவில்களின் தெய்வங்களான உங்கள்
பாதக் கமலங்களில் இப்பாமாலைப் படையல்களைச்
சமர்ப்பணம் செய்கின்றோம்.

**'தாயேயாகி வளர்த்தனை போற்றி'**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையே... எங்கள் அன்னையே...

மாயவன் தங்கை நீ மரகத வல்லிநீ
மணி மந்தர காரிநீயே
மாயசொ ரூபிநீ மகேஸ்வரியு மானநீ
மலையரை யன்மக ளானநீ
தாயே மீனாட்சிநீ சற்குண வல்லிநீ
தயாநிதி விசா லாட்சிநீ
தாரணியில் பெயர் பெற்ற பெரிய நாயகியும் நீ
சரவணனை யீன்ற வளும்நீ
பேய்களுடனாடிநீ அத்தனிடபாகமதில்
பேர்பெற வளர்ந்த வளும்நீ
பிரணவ சொரூபிநீ பிரசன்ன வல்லிநீ
பிரியவுண் ணாமுலையுநீ
ஆயிமகமாயுநீ ஆனந்தவல்லிநீ
அகிலாண்ட வல்லி நீயே
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சியுமையே.

சலதியுலசராசரங் களையின்ற
தாயா கினாலே னக்குத்
தாயல்ல வோ? யான்உன்மைந்த னன்றோ? எனது
சஞ்சலம் தீர்த்து நின்றன்
முலைசுரந் தொழுகுபா லூட்டிஎன் முகத்தை உன்
முந்தானை யால்து டைத்து
மொழிகின்ற மழலைக் குகந்து கொண்டிளநிலா
முறுவல்இன் புற்று கில்யான்
குலவிளை யாடல்கொண் டருமண்மழை பொழிந்து
அங்கை கொட்டி வாவென் (று) அழைத்துக்
குஞ்சரமு கன்கந்தனுக்கு இளையன் என்றெனைக்
கூறினால் ஈனம் உண்டோ?
அலைகடலி லேதோன்று மாறாத அமுதமே
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்ச புராணம்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தினிளம் பிறை போலு மெயிற்றினை
நந்தி மகன் றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பானீக்கி
நுழைதரு நூலினர்ஞாலங்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந்து ஊட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே.

## திருவிசைப்பா

மாலுலா மனம்தந் (து) என்கையிற் சங்கம்
வவ்வினான் மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்தன்
என்னும்என் மெல்லியள் இவளே.

## திருப்பல்லாண்டு

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும்
எமக்கமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யுந் சிவன்சீர்
அடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் லானந்தச் சேந்தன்
எனைபுகுந் தாண்டு கொண்டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையிற் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்..

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகத்தியர் தேவாரத் திரட்டின் வரலாறு

அநாதி முத்த சித்துருவாகிய முதற்கடவுள் சிவபெருமானே என்று ஆன்மாக்கள் துணிந்து வழிபட்டு உய்யும் பொருட்டுப் பல அற்புதங்களினாலே சைவசமயத்தை தாபித்தருளிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் சமயாசாரியர்கள் மூவரால் அருளிச் செய்யப்பட்ட தமிழ் வேதமாகிய தேவாரம் ஒரு லக்ஷத்திரண்டாயிரந் திருப்பதிகமுடையது. அவைகளுள் எழுநூற்றுத்தொண்ணூற்றேழு திருப்பதிகம் ஒழித்து ஒழிந்தவை இறந்து போயின. எஞ்சி நின்ற எழுநூற்றுத்தொண்ணூற்றேழு திருப்பதிகங்களையும் திருவாரூர் அபயகுலசேகரசோழமகாராஜாவுடைய வேண்டுகோளின்படி திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாருடைய மாணாக்கராகிய நம்பியாண்டார்நம்பி ஏழு திருமுறைகளாக வகுத்தருளினார். அவ்வேழும் அடங்கிய திருமுறை அடங்கன் முறை எனப்படும்.

கல்வியறிவொழுக்கங்களாற் சிறப்புற்று விளங்கிய சிவாலய முனிவர் அவ்வடங்கன் முறையினது மகிமையும் அதனை நாடோறும் விதிப்படி சிரத்தையோடு பாராயணஞ் செய்யின் முத்தி சித்திக்குமென்பதையும் அறிந்து, தாம் அப்படிப் பராயணஞ் செய்ய ஆசை கொண்டார். அது நிறைவேறுதல் கூடாமையால் வருத்தமுற்று, சிதம்பரத்தை அடைந்து, கனகசபையின் கண்ணே ஆனந்த தாண்டவஞ் செய்தருளும் சபாநாதரை வணங்கி தமது கருத்து முற்றும் பொருட்டு நெடுங்காலம் அருந்தவம் செய்தார். அப்பொழுது சபாநாதருடைய திருவருளினாலே, ''சிவாலய முனிவனே நீ பொதியமலையிலிருக்கின்ற அகத்திய முனிவனிடத்தே போவாயாயின் உன் கருத்து நிறைவேறும்" என்று ஓர் அசரீரி வாக்கு தோன்றிற்று. அது கேட்ட சிவாலய முனிவர் மனமகிழ்ந்து, சபாநாதரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு சென்று பொதியமலையை அடைந்து அகத்திய மகாமுனிவரைச் சந்தித்து மூன்று வருஷ காலம் அருந்தவம் செய்தார். அகத்திய மகாமுனிவர் அவருக்கு வெளிப்பட்டு, அடங்கன்முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதையும் அவருக்குபதேசித்து, அதனின்றும் இருபத்தைந்து திருப்பதிகங்களை எடுத்துத் திரட்டி, "இவைகளை நாடோறும் பராயணஞ் செய்பவர்கள் அடங்கன் முறை முழுவதையும் பாராயணம் செய்பவர்களாவார்கள்" என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். சிவாலய முனிவர் அப்படியே இவ்விருபத்தைந்து திருப்பதிகங்களையும் நெடுங்காலம் பாராயணஞ் செய்து சிவபெருமானுடைய திருவருளைப் பெற்றார்.

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

அகத்திய மகாமுனிவர்

திரட்டியருளிய

# தேவாரத் திரட்டு

### தேவார நுதலியபொருள்

### நேரிசை வெண்பா

குருவருளும் வெண்ணீ றெழுத்தஞ்சுங் கோயி
லரனுருவு மென்றலைமே லாக்குந் திருவடியுஞ்
சிட்டான வர்ச்சனையுந் தொண்டுஞ் சிவாலயர்க்கென்
றிட்டா ரகத்தியனா ரெட்டு.

## திருப்பதிகக் கருத்துரை
## நிலைமண்டில வாசிரியப்பா

தோடு கூற்றுப் பித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் பேரரு ளாகு
நீற்றுப் பதிக நிகழ்த்துங் காலை
மாற்றுப் பரையின் வரலா றாகுந்
துஞ்சல் காதல் சொற்றுணை மற்று
மஞ்செழுத் துண்மை யருளிய தாகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரூர் தில்லை காட்டூர் மூன்றுஞ்
சீரார் கோயிற் றிறமைய தாகு
மோருரு வரிய பாளை வடிவே
மருவா ரென்ற வண்டமி ழைந்துந்
திருவார் மேனிச் செய்திய தாகும்
பொடியுடை யரவணை யந்த ணாள
னடியிணை தந்த வருளே யாகும்
பந்து வேற்றா கொன்றிவை மூன்று
நந்தலி லருச்சனை நாட்டிய தாகும்
வேய்குலந் தில்லை யெனுமிவை மூன்று
நாயனு மடிமையு நாட்டிய தாகு
மிப்பரி சகத்திய முனிவ னிருநிலத்
தொப்பரு மூவ ரோதுதே வார
முழுதையுஞ் சிவாலய முனிக்கறி வித்துப்
பழுதிலா வவையுட் பரிந்தெடுத்து திருபத்
தைந்துயர் பதிகமு மறிவுறத் திரட்டி
யெண்ணரு மடங்க லியாவையு முணரும்
புண்ணிய மிவைகொடு பொருந்து மென்றவன்
றனக்கருள் செய்தனன் றகவுற வதனாற்
றிதிலா வகத்தியத் திரட்டினை யுலகி
லோதின ரடங்கலு மோதின ராவரே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சிற்றம்பலம்
## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்
## திருப்பிரமபுரம்

பண்-நட்டபாடை இராகம்:-கெம்பீரநாடை

### குருவருள்

### திருச்சிற்றம்பலம்

தோடு டையசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடு டையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன்
னேடு டையமல ரான்முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடு டையபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே (1

முற்ற லாமையிள நாகமோ டேன முளைக்கொம் பவைபூண்டு
வற்ற லோடுகல னாப்பலி தேர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
கற்றல் கேட்டலுடை யார்பெரி யார்கழல் கையாற் றொழுதேத்தப்
பெற்ற மூர்ந்தபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே (2

நீர்ப ரந்தநிமிர் புன்சடை மேலோர் நிலாவெண் மதிசூடி
யேர்ப ரந்தவின வெள்வளை சோரவென் னுள்ளங் கவர்கள்வ
னூர்ப ரந்தவுல கின்முத லாகிய வோரூரி துவென்னப்
பேர்ப ரந்தபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ம கிழ்ந்தமதி லெய்தது மன்றிவி ளங்கு தலையோட்டி
லுண்ம கிழ்ந்துபலி தேரிய வந்தென துள்ளங் கவர்கள்வன்
மண்ம கிழ்ந்தவர வம்மலர்க் கொன்றை மலிந்த வரைமார்பிற்
பெண்ம கிழ்ந்தபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (4

ஒருமை பெண்மையுடை யன்சடை யன்விடை யூரும் மிவனென்ன
வருமை யாகவுரை செய்ய வமர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
கருமை பெற்றகடல் கொள்ளமி தந்ததோர் காலம் மிதுவென்னப்
பெருமை பெற்றபிர மாபுர மேவிய பெம்மானி வனன்றே (5

மறைக லந்தவொலி பாடலோ டாடல ராகி மழுவேந்தி
யிறைக லந்தவின வெள்வளை சோரவென் னுள்ளங் கவர்கள்வன்
கறைக லந்தகடி யார்பொழி னீடுயர் சோலைக் கதிர்சிந்தப்
பிறைக லந்தபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (6

சடைமு யங்குபுன லன்னன லன்னெரி வீசிச் சதிர்வெய்த
வுடைமு யங்குமர வோடுழி தந்தென துள்ளங் கவர்கள்வன்
கடன்மு யங்குகழி சூழ்குளிர் கானலம் பொன்னஞ் சிறகன்னம்
பெடைமு யங்குபிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே (7

வியரி லங்குவரை யுந்திய தோள்களை வீரம் விளைவித்த
வுயரி லங்கையரை யன்வலி செற்றென துள்ளங் கவர்கள்வன்
றுயரி லங்குமுல கிற்பல வூழிக டோன்றும் பொழுதெல்லாம்
பெயரி லங்குபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (8

தானு தல்செய்திறை காணிய மாலொடு தண்டா மரையானு
நீனு தல்செய்தொழி யந்நிமிர்ந் தானென துள்ளங் கவர்கள்வன்
வானு தல்செய்மக ளீர்முத லாகிய வையத் தவரேத்தப்
பேனு தல்செய்பிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்த ரோடுபொறி யில்சம ணும்புறங் கூற நெறிநில்லா
வொத்த சொல்லவுல கம்பலி தேர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
மத்த யானை மறு கவ்வுரி போர்த்ததோர் மாயம் மிதுவென்னப்
பித்தர் போலும்பிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (10

அருநெறி யமறை வல்ல முனியகன் பொய்கை யலர்மேய
பெருநெறி யபிர மாபுர மேவிய பெம்மா னிவன்றன்னை
யொருநெறி யமனம் வைத்துணர் ஞானசம் பந்தன் னுரைசெய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்த லெளிதாமே. (11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு நாயனார்

## திருவதிகைவீரட்டானம்

பண்-கொல்லி இராகம்-நவரோஸ்

குருவருள்

திருச்சிற்றம்பலம்

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநானறியே
னேற்றா யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங் குவனெப் பொழுதுந்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
வாற்றே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. (1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சம் முமக்கே யிடமாக வைத்தே
னினையா தொருபோ துமிருந் தறியேன்
வஞ்சம் மிதுவொப் பதுகண் டறியேன்
வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
நஞ்சா கிவந்தென் னைநலி வதனை
நணுகா மற்றுரந் துகரந் துமிட
ரஞ்சே லுமென்னீ ரதிகைக் கெடில
வீரட் டானத் துறை யம்மானே (2

பணிந்தா ரனபா வங்கள்பாற் றவல்லீர்
படுவெண் டலையிற் பலிகொண் டுழல்வீர்
துணிந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றாற்
சுடுகின் றதுசூ லைதவிர்த் தருளீர்
பிணிந்தார் பொடிகொண்டு மெய்பூ சவல்லீர்
பெற்றமேற்று கந்தீர் சுற்றும் வெண்டலைகொண்
டணிந்தீ ரடிகே ளதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே (3

முன்னம் மடியே னறியா மையினான்
முனிந்தென் னைநலிந் துமுடக் கியிடப்
பின்னை யடியே னுமக்கா ளும்பட்டேன்
சுடுகின் றதுசூ லைத்தவிர்த் தருளீர்
தன்னை யடைந்தார் வினைதீர்ப் பதன்றோ
தலையா யவர்தங் கடனா வதுதா
னன்ன நடையா ரதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே (4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தாள் பவர்கா வலிகழ்ந் தமையாற்
கரைநின் றவர்கண் டுகொளென் றுசொல்லி
நீத்தா யகயம் புகநூக் கியிட
நிலைக்கொள் ளும்வழித் துறையொன் றறியேன்
வார்த்தை யிதுவொப் பதுகேட் டறியேன்
வயிற்றோடு துடக் கிமுடக் கியிட
வார்த்தார் புனலார திகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே (5

சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்
றமிழோ டிசைபா டன்மறந் தறியே
னலந்தீங் கிலுமுன் னைமறந் தறியே
னுன்னா மமென்னா வின்மறந் தறியே
னுலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வா
யுடலுள் ளுறுசூ லைதவிர்த் தருளாய்
யலந்தே யடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே (6

உயர்ந்தேன் மனைவாழ்க் கையுமொண் பொருளு
மொருவர் தலைகா வலிலா மையினால்
வயந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றால்
வலிக்கின் றதுசூ லைதவிர்த் தருளீர்
பயந்தே யென்வயிற் றினகம் படியே
பறித்துப் புரட்டி யறுத்தீர் த்திடநா
னயர்ந்தேன டியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. (7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலித்தேன் மனைவாழ்க் கைமகிழ்ந் தடியேன்
வஞ்சம் மனமொன் றுமிலா மையினாற்
சலித்தா லொருவர் துணையா ருமில்லைச்
சங்கவெண் குழைக்கா துடையெம் பெருமான்
கலித்தே யென்வயிற் றினகம் படியே
கலக்கி மலக்கிட் டுக்கவர்ந் துதின்ன
வலுத்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. (8

பொன்போ லமிளிர் வதொர்மே னியினீர்
புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணியென் றிவற்றை
நணுகா மற்றுரந் துகரந் துமிடீ
ரென்போ லிகளும் மையினித் தெளியா
ரடியார் படுவ திதுவே யாகி
லன்பே யமையும் மதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. (9

போர்த்தா யங்கொரா னையினீ ருரிதோல்
புறங்கா டரங்கா நடமா டவல்லா
யார்த்தா னரக்கன் றனைமால் வரைக்கீ
ழடர்த்திட் டருள்செய் தவது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் மெழுந்தா
லென்வே தனையா னவிலக் கியிடா
யார்த்தார் புனல்சூ ழதிகை கெடில
வீரட் டானத் துறையம் மானே. (10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமூர்த்திநாயனார்

## திருவெண்ணெய்நல்லூர்

பண்- இந்தளம் இராகம்-மாயமாளவகௌளை

குருவருள்

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
வெத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத்தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளாயாவுனக் காளாயினி யல்லேனெனலாமே.

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளன்னேயுனக் காளாயினி யல்லேனெனலாமே.

முடியேனினிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்ற மூர்தீ
கொடியேன்பல பொய்யேயுரைப் பேனைக் குறிக்கொண்ணீ
செடியார் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளடிகேளுனக் காளாயினி யல்லேனெனலாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதம்பணி வார்கள்பெறு பண்டமது பணியா
யாதன்பொரு ளானேனறி வில்லேனரு ளாளா
தாதார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளாதீயுனக் காளாயினி யல்லேனென லாமே.

தண்ணார்மதி சூடிதழல் போலுந்திரு மேனி
யெண்ணார்புர மூன்றுமெரி யுண்ணநகை செய்தாய்
மண்ணார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளண்ணாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

ஊனாயுயி ரானாயுட லானாயுல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்
தேனார் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளானாயுனக் காளாயினி யல்லேனென லாமே.

ஏற்றார்புர மூன்றுமெரி யுண்ணச்சிலை தொட்டாய்
தோற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீ
ரேற்றாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளாற்றாயுனக் காளாயினி யல்லேனென லாமே.

மழுவாள்வல னேந்திமறை யோதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தலுன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளழகாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

காரூர்புன லெய்திக்கரை கல்லித்திரைக் கையாற்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளாருரனெம் பெருமாற்கா ளல்லேனென லாமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
## திருவாலய திருநீற்றுப் பதிகம்

பண்-காந்தாரம் இராகம்-நவரோஸ்

பரையின் வரலாறு

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் றிருவால வாயான் றிருநீறே.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் றிருநீறே.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் றிருநீறே.

கான வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மானந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் றிருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு வந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் றிருநீறே.

அருத்தம தாவது நீறு வல்ல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானமளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகைசூழ்ந்த திருவால வாயான் றிருநீறே.

எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
வயிலைப் பொலிதரு சூலத் தாலவா யான்றிரு நீறே.

இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
வராவணங் குந்திருமேனி யாலவா யான்றிரு நீறே.

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
வேல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
வாலம துண்டமி டற்றெம் மாலவா யான்றிரு நீறே.

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருதவினியது நீறு
வெண்டிசைப் பட்ட பொருளா ரேந்துந் தகையது நீறு
வண்டத்தவர் பணிந் தேத்து மாலவா யான்றிரு நீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலிநி லாவும் பூசுரன் ஞான சம்பந்தன்
தேற்றித் தென்னனுட லுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
## பஞ்சாக்கரத் திருப்பதிகம்

பண்-காந்தார பஞ்சமம் இராகம்- கேதாரகௌளை

அச்செழுத்துண்மை

திருச்சிற்றம்பலம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினு
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன வஞ்செ ழுத்துமே.

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திர மஞ்செ ழுத்துமே.

ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிட
ரான கெடுப்பன வஞ்செ ழுத்துமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்
தல்லல் கெடுப்பன வஞ்செ ழுத்துமே.

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமு மஞ்ச வைம்பொழிற்
றங்கர வின்பட மஞ்சுந் தம்முடை
யங்கையி லைவிர லஞ்செ ழுத்துமே.

தும்ம லிரும றொடர்ந்த போழ்தினும்
வெம்மை நகரம் விளைந்த போழ்தினு
மிம்மை வினையடர்த் தெய்து போழ்தினு
மம்மையி னுந்துணை யஞ்செ ழுத்துமே.

வீடு பிறப்பை யறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாடொறு
மாடு கொடுப்பன மன்னு மாநட
மாடி யுகப்பன வஞ்செ ழுத்துமே.

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டையிராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் தொண்டு துதித்த பின்னவர்க்
கண்ட மளிப்பன வஞ்செ ழுத்துமே.

கார்வண னான்முகன் காணுதற் கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன வஞ்செ ழுத்துமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்க டெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன வஞ்செ ழுத்துமே.

நற்றமிழ் ஞானசம் பந்த னான்மறை
கற்றவன் காழியர் மன்ன னுன்னிய
வற்றமின் மாலையீ ரைந்து மஞ்செழுத்
துற்றன வல்லவ ரும்ப ராவரே.

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
## நமச்சிவாயத் திருப்பதிகம்

பண்-கௌசிகம் இராகம்-பைரவி

அஞ்செழுத் துண்மை
திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
யோது வார்தமை நன்நெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாம நமச்சி வாயவே.

நம்பு வார்நமர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலா
நம்ப னாம நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெக்கு ளார்வ மிகப்பெரு கிநினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராய்த்தகு விப்பது
நக்க னாம நமச்சி வாயவே.

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலா
னயம்வந் தோதவல் லார்தமை நண்ணினா
னியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாம நமச்சி வாயவே.

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைக
ளில்லா ரேனு மியம்புவ ராயிடி
னெல்லாத் தீங்கையு நீக்குவ ரென்பரா
னல்லார் நாம நமச்சி வாயவே.

மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேற்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமா
னந்தி நாம நமச்சி வாயவே.

நரக மேழ்புக நாடின ராயினு
முரைசெய் வாயின ராயினு ருத்திரர்
வீரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னாம நமச்சி வாயவே.

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேற்
றலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலு
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொ ணாம நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதன் போதன கண்ணனு மண்ணறன்
பாதந் தான்முடி நேடிய பண்பரா
யாதுங் காண்பரி தாகிய லந்தவ
ரோது நாம நமச்சி வாயவே.

கஞ்சி மண்டையர் கையினுன் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் வீரவில் ரென்பாரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட வமுதுசெய்
நஞ்சுள் கண்ட னமச்சி வாயவே.

நந்தி நாம நமச்சிவா யவெனுஞ்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொற்
சிந்தை யான் மகிழ் தேத்தவல் லாரெல்லாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே.

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு நாயனார்
## நமசிவாயத் திருப்பதிகம்

பண்-காந்தாரபஞ்சமம் இராகம்-கேதாரகௌளை

அச்செழுத் துண்மை

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினு
நற்றுணை யாவது நமச்சி வாயவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
யாவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே

விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழ
லுண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவேஎ

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற்பி ரானென்று வினவு வோமல்லோ
மடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலா
மந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கந்
திங்களுக் கருங்கல திகழு நீண்முடி
நங்களுக் கருங்கல நமச்சி வாயவே.

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கல்லா
னலமில னாடொறு நல்கு வானலன்
குலமில ராகினுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்
கூடினா ரந்நெறி கூடச் சென்றலு
மோடினே னோடிச்சென் றுருவங் காண்டலு
நாடினே னாடிற்று நமச்சி வாயவே.

இல்லக விளக்கது விருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
றன்னெறி யேசர ணாத றிண்ணமே
யந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலா
நன்னெறி யாவது நமச்சி வாயவே.

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே.

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி நாயனார்

## திருப்பாண்டிக்கொடுமுடி

பண்-பழம்பஞ்சுரம் இராகம்-சங்கராபரணம்

அஞ்செழுத் துண்மை

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப் பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேனி னிப்பிற வாததன் மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக்கொடுமுடி
நற்ற வாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

இட்ட னும்மடி யேத்து வாரிகழ்ந் திட்ட நாண்மறந்திட்டநாள்
கெட்ட நாளிவை யென்ற லாற்கரு தேன்கி ளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்ட டிதொழு தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவு நாளுணர் வழியு நாளுயிர் போகு நாளுயர் பாடைமேற்
காவு நாளிவை யென்ற லாற்கரு தேன்கி ளர்புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்தி ழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

எல்லை யில்புக ழெம்பி ரானெந்தை தம்பி ரானென்பொன் மாமணி
கல்லை யுந்திவ ளம்பொ ழிந்திழி காவி ரியதன் வாய்க்கரை
நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்ல வாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

அஞ்சி னார்க்கர ணாதி யென்றடி யேனு நான்மிக வஞ்சினே
னஞ்ச லென்றடித் தொண்ட னேற்கரு ளல்கி னாய்க்கழிகின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவைமார்குடைந் தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்ச ணிகண்ட நான்க றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

ஏடு வானிளந் திங்கள் சூடினை யென்பின் கொல்புலித் தோலின்மே
லாடு பாம்பத ரைக்க சைத்த வழகனே யந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்தி ழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடி
சேட னேயுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

விரும்பி நின்மலர்ப் பாத மேநினைந் தேன்வி னைகளும் விண்டன
நெருங்கிவண்பொழில்சூழ்ந்தெழில்பெறநின்றகாவிரிக்கோட்டிடைக்
குரும்பைமென்முலைக்கோதைமார்குடைந்தாடுபாண்டிக்கொடுமுடி
விரும்ப னேயுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

செம்போ னேர்சடை யாய்தி ரிபுரந் தீயெ ழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாகம மர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயி லாடு பாண்டிக் கொடுமுடி
நம்ப னேயுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார ணன்றந்தை யெம்பி ரானெந்தை தம்பி ரானென்பொன் மாமணியென்று
பேரெ ணாயிர கோடி தேவர்பி தற்றிநின்று பிரிகிலார்
நார ணன்பிர மன்றொ ழுங்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
கார ணாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

கோணி யபிறை சூடி யைக்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணி யபெரு மானைப் பிஞ்ஞகப் பித்த னைப்பிறப் பில்லியைப்
பானு லாவரி வண்ட றைகொன்றைத் தார னைப்படப் பாம்ரை
நாண னைத்தொண்ட னூரன் சொல்லிவை சொல்லு வார்க்கில்
லைத் துன்பமே.

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
# திருஷேத்திரக்கோவை

பண்-இந்தளம் இராகம்-மாயமாளவகௌளை

### கோயிற்றிறம்

திருச்சிற்றம்பலம்

ஆரூர்தில்லை யம்பலம் வல்லநல்லம்
வடகச்சியு மச்சிறுபாக்க நல்ல
கூரூர்குட வாயில் குடந்தை வெண்ணி
கடல்சூழ்கழிப் பாலைதென் கோடிபீடார்
நீரூர்வய னின்றியூர் குன்றியூருங்
குருகாவையூர் நாரையூர் நீடுகானப்
பேரூர்நன் னீள்வய னெய்த்தானமும்
பிதற்றாய்பிறை சூடிதன் பேரிடமே. (1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாமலை யீங்கோயு மத்திமுத்தா
றகலாமுது குன்றங் கொடுங்குன்றமுங்
கண்ணார்கழுக் குன்றங் கயிலைகோணம்
பயில்கற்குடி காளத்தி வாட்போக்கியும்
பண்ணார்மொழி மங்கையோர் பங்குடையான்
பரங்குன்றம் பருப்பதம் பேணிநின்றே
யெண்ணாயிர வும்பகலு மிடும்பை
கடனீந்த லாங் காரணமே. (2

அட்டானமென் றோதியநா லிரண்டு
மழகன்னுறை காவனைத்துந் துறைக
ளெட்டாந்திரு மூர்த்தியின்கா டொன்பதுங்
குளமூன்றுங் களமஞ்சும் பாடிநான்கு
மட்டார்குழ லாண்மலை மங்கைபங்கன்
மதிக்கும்மிட மாகிய பாழிமூன்றுஞ்
சிட்டானவன் பாசூரென்றே விரும்பா
யரும்பாவங்க ளாயின தேய்ந்தறவே. (3

அறப்பள்ளியகத்தியான் பள்ளி வெள்ளைப்பொடிபூசி
நீறணிவா னமர்காட் டுப்பள்ளி
சிறப்பள்ளி சிராப்பள்ளி செம்பொன்பள்ளி திருநனிப்பள்ளி
சீர்மகேந் திரத்துப்
பிறப்பில்லவன் பள்ளிவெள்ளச் சடையான்
விரும்பும்மிடைப் பள்ளிவண் சக்கரமா
லுறைப்பாலடி போற்றக்கொடுத்த பள்ளி
யுணராய்மட நெஞ்சமே யுன்னிநின்றே. (4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறைவட மாகறலம்ப ரையா
றணியார்பெரு வேளூர்விளமர் தெங்கூர்
சேறைதுலை புகுலூ ரகலா
திவைகாதலித் தானவன் சேர்பதியே. (5

மனவஞ்சர்மற் றோடமுன் மாதராரு
மதிகூர்திருக் கூடலி லாலவாயு
மினவஞ்சொலிலா விடைமா மருது
மிரும்பைப்பதி மாகாளம் வெற்றியூருங்
கனமஞ்சின மால்விடையான் விரும்புங்
கருகாவூர் நல்லூர் பெரும்புலியூர்
தனமென்சொலிற் றஞ்சமென்றே நினைமின்
றவமாமல மாயினதா னறுமே. (6

மாட்டூர்மடப் பாச்சிலாச் சிராம
முண்டீச்சரம் வாதவூர் வாரணாசி
காட்டூர் கடம்பூர் படம்பக்கங் கொட்டுங்
கடலொற்றியூர் மற்றுறையூ ரவையுங்
கோட்டூர் திருவாமாத்தூர் கோழம்பமுங்
கொடுங்கோவலூர் திருக்குணவாயே. (7

குலாவுதிங்கட் சடையான் குளிரும்பரிதி நியமம்
போற்றூ ரடியார்வழி பாடொழியாத்
தென்புறம்பயம் பூவணம் பூழியூருங்
காற்றூர் வரை யன்றெடுத்தான் முடிதோணெரித்தா
னுறைகோயி லென்றென்று நீகருதே. (8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்குன்ற மோத்தூர் நிறைநீர்மருக
நெடுவாயில் குறும்பலா நீடுதிரு
நற்குன்றன் வலம்புர நாகேச்சர
நளிர்சோலையுஞ் சேனைமாகாளம் வாய்மூர்
கற்குன்றமொன் றேந்தி மழைதடுத்த
கடல்வண்ண னு மாமலரோனுங் காணாச்
சொற்கென்றுந் தொலைவிலாதா னுறையுங்
குடமூக்கென்று சொல்லிக்குலா வுமினே. (9

குத்தங்குடி வேதி குடிபுனல்சூழ்
குருந்தங்குடி தேவன் குடிமருவு
மத்தங்குடி தண்டிரு வண்குடியு
மலம்புஞ்சலந் தன்சடை வைத்துகந்த
நித்தன் னிமலனுமை யோடுங்கூட
நெடுங்கால முறைவிட மென்றுசொல்லாப்
புத்தர்புறங் கூறிய புன்சமணர்
நெடும்பொய்களை விட்டுநினைந் துய்மினே. (10

அம்மானை யருந்தவ மாகிநின்ற
வமரர்பெரு மான்பதி யானவுன்னிக
கொய்ம்மா மலர்ச்சோலை குலாவுகொச்சைக்
கிறைவன் சிவஞானசம்பந்தன் சொன்ன
விம்மாலை யீரைந்து மிருநிலத்தி
லிரவும் பகலுநினைந் தேத்திநின்று
விம்மாவெருவா விரும்பும் மடியார்
விதியார் பிரியார்சிவன் சேவடிக்கே. (11

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசு நாயனார்

## திருஷேத்திரக்கோவை

பண்-திருத்தாண்டகம் இராகம்-அரிகாம்போதி

### கோயிற்றிறம்

திருச்சிற்றம்பலம்

தில்லைச்சிற் றம்பலமுஞ் செம்பொன் பள்ளி
தேவன்குடி சிராப்பள்ளி தெங்கூர்
கொல்லிக்குளி றறைப்பள்ளி கோவல்
வீரட்டங் கோகரணங் கோடி காவு
முல்லைப் புறவ முருகன் பூண்டி
முழையூர் பழையாறை சத்திமுற்றங்
கல்லிற் றிகழ்சீரார் காளத்தியும்
கயிலாய நாதனையே காண லாமே. (1

ஆரூர்மூ லட்டான மானைக் காவு
மாக்கூரிற் றான்றோன்றி மாட மாவூர்
பேரூர் பிரமபுரம் பேரா வூரும்
பெருந்துறை காம்பீலி பிடவூர் பேணுங்
கூரார் குறுக்கை வீரட்டானமுங்
கோட்டூர் குடமூக்குக் கோழம்பமும்
காரார் கழுக்குன்றுங் காணப் பேருங்
கயிலாய நாதனையே காண லாமே. (2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைமரு தீங்கோ யீராமேச்சர
மின்னம்ப ரேரிடவை யேமப்பேறூர்
சடைமுடி சாலைக் குடிதக்களூர்
தலையா லங்காடு தலைச்சங் காடு
கொடுமுடி குற்றாலங் கொள்ளம் பூதூர்
கோத்திட்டை கோட்டாறு கோட்டுக் காடு
கடைமுடி கானூர் கடம்பந்துறை
கயிலாய நாதனையே காண லாமே. (3

எச்சி லிளம ரேம நல்லூ
ரிலம்பையங் கோட்டு ரிறையான் சேரி
யச்சிறு பாக்க மளப்பூ ரம்ப
ராவடு தண்டுறை யழுந்தூ ராறை
கச்சினங் கற்குடி கச்சூ ராலக்
கோயில் கரவீரங் காட்டுப் பள்ளி
கச்சிப் பலதளியு மேகம் பத்துங்
கயிலாய நாதனையே காண லாமே. (4

கொடுங்கோளூ ரஞ்சைக் களஞ்செங் குன்றூர்
கொங்கணங் குன்றியூர் குரக்குக் காவு
நெடுங்கள நன்னில நெல்லிக் காவு
நின்றியூர் நீடூர் நியம நல்லூ
ரிடும்பா வனமெழு மூரேழூர் தோழு
ரெறும்பியூ ரேராரு மேம கூடங்
கடம்மை யிளங்கோயி றன்னி னுள்ளூங்
கயிலாய நாதனையே காண லாமே. (5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணிப் படிக்கரை வாழிகொளி புத்தூர்
வக்கரை மந்தாரம் வாரணாசி
வெண்ணி வீளத்தொட்டி வேள்விக்குடி
விளமர் விராடபுரம் வேட்களத்தும்
பெண்ணை யருட்டுறைதண் பெண்ணாகடம்
பிரம்பில் பெரும்புலியூர் பெருவேளூருங்
கண்ணை களர்க்காறை கழிப்பாலையுங்
கயிலாய நாதனையே காண லாமே. (6

வீழி மிழலைவெண் காடு வேங்கூர்
வேதி குடிவிசய மங்கை வியலூ
ராழி யகத்தியான் பள்ளி யண்ணா
மலையா லங்காடு மரதைப்பெரும்
பாழி பழனம் பனந்தாள் பாதாளம்
பாராய்த்துறை பைஞ்ஞீலி பனங்காட்டூர் தண்
காழி கடனாகைக் காரோணத்துங்
கயிலாய நாதனையே காண லாமே. (7

உஞ்சேனை மாகாள ழூற லோத்தூ
ருருத்திர கோடி மறைக்காட் டுள்ளு
மஞ்சார் பொதியின் மலைதஞ்சை வழுவூர்
வீரட்ட மாதானங் கேதா ரத்தும்
வெஞ்சமாக் கூடன்மீ யச்சூர் வைகா
வேதீச் சுரம்வீவீ சுரம்வெற்றி யூருங்
கஞ்ச னூர்கஞ் சாறுபஞ் சாக்கையுங்
கயிலாய நாதனையே காண லாமே. (8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்டீச் சரஞ்சேய்ஞ லூர்செம்பொன் பள்ளி
தேவூர் சிரபுரஞ் சிற்றேமஞ் சேறை
கொண்டீச் சரங்கூந்த லூர்கூழை யூர்கூடல்
குருகாவூர் வெள்ளடை குமரி கொங்கு
அண்டர் தொழுமதிகை வீரட் டான
மையா றசோகந்தி யாமாத் தூருங்
கண்டியூர் வீரட்டாங் கருகாவூருங்
கயிலாய நாதனையே காண லாமே. (9

நறையூரிற் சித்தீச் சரநள் ளாறு
நாரையூர் நாகேச் சரநல் லூர்நல்ல
துறையூர் சோற்றுத் துறைசூல மங்கை
தோணிபுரந் துருத்தி சோமீச்சர
முறையூர் கடலொற்றி யூரூற் றத்தூ
ரோமாம் புலியூரோ ரேட கத்துங்
கறையூர் கருப்பறியல் கன்றாப் பூருங்
கயிலாய நாதனையே காண லாமே. (10

புலிவலம் புத்தூர் புகலூர் புன்கூர்
புறம்பயம் பூவணம் பொய்கை நல்லூர்
வலிவல மாற்பேறு வாய்மூர் வைகல்
வலஞ்சுழி வாஞ்சிய மருகல் வன்னி
நிலமலிநெய்த் தானத்தோ டெத்தா னத்து
நிலவு பெருங்கோயில் பலகண்டாற் றொண்டீர்
கலிமலி மிக்கோனைக் கால்வீர லாற்செற்ற
கயிலாய நாதனையே காண லாமே. (11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரமூர்த்திநாயனார்

## ஊர்த்தொகை

பண்-பழம்பஞ்சுரம் இராகம்-சங்கராபரணம்

கோயிற்றிறம்

திருச்சிற்றம்பலம்

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே கானப் பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே யழுந்தூ ரரசே கொழுநற் கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய் பனங்காட் டூரானே
மாட்டூ ரறவா மறவா துன்னைப் பாடப் பணியாயே. (1

கொங்கிற் குறம்பிற் குரக்குத் தளியாய் குழகா குற்றாலா
மங்குற் றிரிவாய் வானோர் தலைவா வாய்மூர் மணவாளா
சங்கைக் குழையார் செவியா வழகா வவியா வனலேந்திக்
கங்குற் புறங்காட் டாடீ யடியார் கவலை களையாயே. (2

நிறைக்காட் டானே நெஞ்சத் தானே நின்றி யூரானே
மிறைகாட் டானே புனல்சேர் சடையா யனல்சேர் கையானே
மறைக்காட் டானே திருமாந் துறையாய் மாகோ ணத்தானே
யிறைக்காட் டாயே யெங்காட் குன்னை யெம்மான் றம்மானே. (3

ஆரூ ரத்தா வையாற் றமுதே யளப்பூ ரம்மானே
காரூர் பொழில்கள் புடைசூழ் புறவீற் கருகா வூரானே
பேரூ ருறைவாய் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே
பாரூர் பலரும் பரவப் படுவாய் பாசூ ரம்மானே. (4

மருக லுறைவாய் மாகா ளத்தாய் மதியஞ் சடையானே
மருகற் பிணிநின் னடியார் மேல வகல வருளாயே
யருகற் குரலாய் வெண்ணிக் கரும்பே கானூர்க் கட்டியே
பருகப் பணியா யடியார்க் குன்னைப் பவளப் படியானே. (5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கூர் பிணிநின் னடியார் மேல வகல வருளாயே
வேங்கூ ருறைவாய் விளமர் நகரமாய் விடையார் கொடியானே
நாங்கூ ருறைவாய் தேங்கூர் நகராய் நல்லூர் நம்பானே
பாங்கூர் பலிதேர் பரனே பரம பழனப் பதியானே. (6

தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந்தாராய்
வானைக் காவல் கொண்டு நின்றா ரறியா நெறியானே
யானைக் காவி லரனே பரனே யண்ணா மலையானே
பூனைக் காவல் கைவிட் டுன்னை யுகப்பா ருணர்வாரே. (7

துருத்திச் சுடரே நெய்த்தா னத்தாய் சொல்லாய் கல்லாலா
பருத்தி நியமத் துறைவாய் வெயிலாய்ப் பலவாய்க் காற்றானாய்
திருத்தித் திருத்தி வந்தென் சிந்தை யிடங்கொள் கயிலாயா
வருத்தித் துன்னை யடைந்தார் வினைக ளகல வருளாயே. (8

புலியூர்ச் சிற்றம் பலத்தாய் புகலூர்ப் போதா மூதூரா
பொலிசேர் புரமூன் றெரியச் செற்ற புரிபுன் சடையானே
வலிசே ரரக்கன் றடக்கை யைஞ்ஞான் கடர்த்த மதிசூடி
சலிசேர் புறவிற் கடவூ ரானீ காண வருளாயே. (9

கைம்மா வுரிவை யம்மான் காக்கும் பலவூர் கருத்துன்னி
மைம்மாந் தடங்கண் மதுர மன்ன மொழியாண் மடச்சிங்கடி
தம்மா னூரான் சடையான் சிறுவ னடியான் றமிழ்மாலை
செம்மாந் திருத்து திருவாய் திறப்பார் சிவலோ கத்தாரே. (10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

## திருவெழுக்கூற்றிருக்கை

பண்-வியாழக்குறிஞ்சி இராகம்-சௌராஷ்ரம்

சிவனுருவம்

திருச்சிற்றம்பலம்

ஓருரு வாயினை வாயினை மானாங் கரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதல்
மொன்றிய விரிசுட ரும்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக னாயினை
யிருவரோ டொருவ னாகி நின்றனை
யோரா னீழ லொண்கழ லிரண்டு
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்டமூன் றாகக் கோட்டினை
யிருநதி யரவமோ டொருமதி சூடினை
யொருதா ளீரயின் மூவிலைசூல
நாற்கான் மான்றி யைந்தலை யரவ
மேந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
யொருதனு விருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானில மஞ்சக்
கொன்று தலத்துற வவுணரை யறுத்தனை
யைம்புல னாலா மந்தக் கரண
முக்குண மிருவளி யொருங்கிய வானோ
ரேத்த நின்றனை யொருங்கிய மனத்தோ
டிருபிறப் போர்ந்துமுப் பொழுது குறைமுடித்து
நான்மறை யோதி யைவகை வேள்வி
யமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
யறுபத முரலும் வேணுபுரம் விரும்பின
யிகலியமைந்துணர் புகலி யமர்ந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமு வுலகும் புதையமேன் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா வீருநிதி
வாயந்த பூந்தரா யேய்ந்தனை
வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை
யொருமையை யெடுத்த விருதிமிற லரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோ னான்முக னறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை
யையுறு மமணரு மறுவகைத்தேரரு
மூழியு முணராக் காழி யமர்ந்தனை
யெச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
யாறு பதமு மைந்தமர் கல்வியு
மறைமுத னான்கு
மூன்று காலமுந் தோன்ற நின்றனை
யிருமையி னொருமையு மொருமையின் பெருமையு
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுனியன் கட்டுரை
மனைய தன்மையை யாதலி னின்னை
நினைய வல்லவ ரில்லைநீ ணிலத்தே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

திருக்கடவூர்மயானம்

பண்-காந்தாரம் இராகம்-நவரோஸ்

## சிவனுருவம்

திருச்சிற்றம்பலம்

வரிய மறையார் பிறையார் மலையோர் சிலையா வணக்கி
யெரிய மதில்க ளெய்தா ரெறியு முசல முடையார்
கரிய மிடறு முடையார் கடவூர் மயான மமாந்தார்
பெரிய வீடைமேல வருவா ரவரெம் பெருமா னடிகளே. (1

மங்கை மணந்த மார்பர் மழுவாள் வலனோன் றேந்திக்
கங்கை சடையிற் கரந்தார் கடவூர் மயான மமந்தார்
செங்கண் வெள்ளே றேறிச் செல்லஞ் செய்யா வருவா
ரங்கை யேறிய மறியா ரவரெம் பெருமா னடிகளே. (2

ஈட லிடப மிசைய வேறி மழுவொன் றேந்திக்
காட திடமா வுடையார் கடவூர் மயான மமர்ந்தார்
பாட லிசைகொள் கருவீ படுதம் பலவும் பயில்வா
ராட லரவ முடையா ரவரெம் பெருமா னடிகளே. (3

இறைநின் றிலங்கு வளையாளிளையா ளொருபா லுடையார்
மறைநின் றிலங்கு மொழியார் மலையார் மனத்தின்மிசையார்
கறைநின் றிலங்கு பொழில்டசூழ் கடவூர் மயான மமர்ந்தார்
பிறைநின றிரங்கு சடையா ரவரெம் பெருமா னடிகளே. (4

வெள்ளை யெருத்தின் மிசையார் விரிதோடொருகா திலங்கத்
துள்ளு மிளமான் மறியார்சுடர்பொற் சடைக டுலங்கக்
கள்ள நகுவெண் டலையார் கடவூர் மயான மமர்ந்தார்
பிள்ளை மதிய முடையா ரவரெம் பெருமா னடிகளே. (5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்றா துதிருமணங்கொள் புனைபூங் கொன்றைபுனைந்தா
ரொன்றா வெள்ளே றுயர்த்த துடையா ரதுவே யூர்வார்
கன்றா வினஞ்சூழ் புறவிக்கடவூர் மயான மமர்ந்தார்
பின்றாழ் சடையா ரொருவ ரவரெம் பெருமா னடிகளே. (6

பாச மான களைவார் பரிவார்க் கமுத மனையா
ராசை தீரக் கொடுப்பா ரலங்கல் விடைமேல் வருவார்
காசை மலர்போன் மிடற்றார் கடவூர் மயான மமர்ந்தார்
பேச வருவா ரொருவ ரவரெம் பெருமா னடிகளே (7

செற்ற வரக்க னலறத் திகழ்சே வடிமெல் விரலாற்
கற்குன் றடர்த்த பெருமாமான் கடவூர் மயான மமர்டந்தார்
மற்றொன் றிணையில் வலிய மாசில் வெள்ளி மலைபோற்
பெற்றொன் றேறி வருவா ரவரெம் பெருமா னடிகளே. (8

வருமா கரியி னுரியார் வளர்புன் சடையார் விடையார்
கருமா னுரிதோ லுடையார் கடவூர் மயான மமர்ந்தார்
திருமா லொடுநான் முகனுந்தேர்ந்துங் காண முன்னொண்ணாப்
பெருமா னெனவும் வருவா ரவரெம் பெருமா னடிகளே. (9

தூய விடைமேல் வருவாய் துன்னா ருடைய மதில்கள்
காய வேவச் செற்றார் கடவூர் மயான மமர்ந்தார்
தீய கருமஞ் சொல்லுஞ் சிறுபுன் றேர ரமணர்
பேய்பே யென்னா வருவா ரவரெம் பெருமா னடிகளே. (10

மரவம் பொழில்சூழ் கடவூர் மன்னு மயான மமர்ந்த
வரவ மசைத்த பெருமா னகல மறிய லாகப்
பரவு முறையே பயிலும் பந்தன் செஞ்சொன் மாலை
யிரவும் பகலும் பரவி நிரனைவார் வினைக ளிலரே. (11

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசு நாயனார்

## கோயிற்றிருவிருத்தம்

பண்-கொல்லி
சிவனுருவம்

திருச்சிற்றம்பலம்

பாளை யுடைக்கமு கோங்கிப்பன் மாட நெருங்கியெங்கும்
வாளை யுடைப்புனல் வந்தெறி வாழ்வயற் றில்லைதன்னு
ளாள வுடைக்கழற் சிற்றம்பலத்தர னாடல் கண்டாற்
பீளை யிடக்கண்க ளாற்பின்னைப் பேய்த் தொண்டர் காண்ப
தென்னே. (1

பொருவிடை யொன்றுடைப் புண்ணிய மூர்த்தி புலிதள
னுருவுடை யம்மலை மங்கை மணாள னுலகுக்கெல்லாந்
திருவுடை அந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
றிருவடி யைக்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. (2

தொடுத்த மலரொடு தூபமுஞ் சாந்துங்கொண் டெப்பொழுது
மடுத்து வணங்கு மயனொடு மாலுக்குங் காண்பரியான்
பொடிக்கொண் டணிபொன் னாகிய தில்லைச்சிற் றம்பலந்து
ளுடுத்த துகில்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. (3

வைச்ச பொருணமக் காகுமென் றெண்ணி நமச்சிவாய
வச்ச மொழிந்தே னணிதில்லை யம்பலத் தாடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி யுந்தியின் மேலசைத்தி
கச்சி னழகுகண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே. (4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க
நெஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற வாடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு
காண்பதென்னே. (5

ஊனத்தை நீக்கி யுலகறி யவென்னை யாட் கொண்டவன்
றேனொத் தெனக்கினி யான்றில்லைச் சிற்றம் பலவனெங்கோன்
வானத் தவருய்ய வன்னஞ்சை யுண்டகண் டத்திலங்கு
மேனத் தெயிறுகண் டாற்பின்னைக் கண்கொண்டு
காண்பதென்னே (6

தெரித்த கணையாற் றிரிபுர மூன்றுஞ்செந் தீயின்மூழ்க
வெரித்த விறைவ னிமையவர் கோமா னிணையடிக
டரித்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
சிரித்த முகங்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. (7

சுற்று மமரர் சுரபதி நின்றிருப பாதமல்லாற்
பற்றொன் றிலோமென் றழைப்பப் பரவையு ணஞ்சையுண்டான்
செற்றங் கநங்கனைத் தீவிழித் தான்றில்லை யம்பலவ
னெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே (8

சித்தத் தெழுந்த செழுங்கம லத்தன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
முத்தும் வயிரமு மாணிக்கந் தன்னுள் விளங்கியதூ
மத்த மலர்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. (9

தருக்கு மிகுத்துத்தன் றோள்வலி யுன்னித் தடவரையை
வரைக்கை களாலெடுத் தார்ப்ப மலைமகள் கோன்சிரித்து
வரக்கன் மணிமுடி பத்து மணிதழல்லை யம்பலவ
னெருக்கி மிதித்த வழரல்கண்ட கண்கொண்டு
காண்பதென்னே. (10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசு நாயனார்

## திருப்பூவணம்

### சிவனுருவம்

திருச்சிற்றம்பலம்

வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமே லிளமதியந் தோன்றுந் தோன்றுங்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்று
மிடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்று
மெழிறிகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
லபாடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. (1

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்று
மடியவர்கட் காரமுத மாகித் தோன்று
மூணாகி யூர்திரிவா னாகித்தோன்று
மொற்றைவெண் பிறைதோன்றும் பற்றார்தம்மேற்
சேணாக வரைவில்லா லெழுத்த றோன்றுஞ்
செத்தவர்த மெலும்பினாற் செறியச் செய்த
பூணானு மரைநாணும் பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. (2

கல்லாலி னீழறனிற் கலந்து தோன்றுங்
கவின்மறையோர் நால்வர்க்கு நெறிக ளன்று
சொல்லாமற் சொல்லியவா தோன்றுந் தோன்றுஞ்
சூழரவு மான்மறியுந் தோன்றுந் தோன்று
மல்லாத காலனைமுன் னடர்த்த றோன்று
மைவகையா னினைவார்பா லமர்ந்து தோன்றும்
பொல்லாத புலாலெலும்பு பூணாய்த் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. (3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைமலிந்த மழுவாளு மானுந் தோன்றும்
பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்று
நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்று
நான்மறையி னொலிதோன்று நயனந் தோன்று
முடைமலிந்த கோவணமுங் கீளுந் தோன்றும்
நூரல்வெண் சீரமாலை யுலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. (4

மயலாகுந் தன்னடியார்க் கருளுந் தோன்று
மாசிலாப் புன்சடைமேன் மதியந் தோன்று
மியல்பாக விடுபிச்சை யேற்ற றோன்று
மிருகங்கடனஞ் சுண்டிருண்ட கண்டந் தோன்றுங்
கயல்பாயக் கடங்கலுழிக் கங்கை நங்கை
யாயிமைா முகத்தினொடு வானிற் றோன்றும்
புயல்பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. (5

பாராழி வட்டதடதார் பரவி யிட்ட
பன்மலரு நறும்புகையும் பரந்து தோன்றுஞ்
சீராழித் தாமரையின் மலர் ளன்ன
திருத்தியமா நிறத்தசே வடிக டோன்று
மோராழித் தேருடைய விலங்கை வேந்த
னுடறுணித்த விடர்பாவங் கெடுப்பித் தன்று
போராழி முன்னீற்ந்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே (6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னடியார்க் கருள்புரிந்த தகவு தோன்றுஞ்
சதுர்முகனைத் தலையரிந்த தன்மை தோன்று
மின்னனைய நுண்ணிடையாள் பாகந் தோன்றும்
வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்த றோன்றுந்
துன்னியசெஞ் சடைமேலோர் புனலும் பாம்புந்
தூயமா மதியுடனே வைத்த றோன்றும்
பொன்னனைய திருமேனி பொலிந்து போன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்ககே. (7

அரும்போது முலைமடவாள் பாகந் தோன்று
மணிகிளரு முருமொன்ன வடர்க்குங் கேழன்
மருப்போட்டு மணிவயிரக் கோவை தோன்று
மணமலிந்த நடந்தோன்று மணியார் வைகைத்
திருக்கோட்டி னின்றதோர் திறமும் தோன்றுஞ்
செக்கர்வா னொளிமிக்குத் திகழ்ந்த சோதிப
பெருபோட்டி நின்றதிண் புயமும் தொன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே. (9

ஆங்கணைந்த சண்டிக்கு மருளி யன்று
தன்முடிமே லலர்மாலை யளித்த தோன்றும்
பாங்கணைந்து பணிசெய்வார்க் கருளி யன்று
பலபிறவி யறுத்தருளும் பரிசுந் தோன்றுங்
கோங்கணைந்த கூவிளமு மதமத் தம்முங்
குழற்கணிந்த கொள்கையொடு கோலந்தோன்றும்
பூங்கணைந்த கொள்கையொடு பொற்புத் தோன்றும்
பொழிபகளும் பூவணத்தெம் புனித னார்க்கே. (10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆருருவ வுள்குவா ருள்ளத் துள்ளே
யவ்வுருவாய் நிற்கின்ற வருளுந் தோன்றும்
வாருருவப் பூண்முலைநன் மங்கை தன்னை
மகிழ்ந்தொருபால் வைத்துகந்த வடிவு தோன்று
நிருருவக் கடலிலங்கை யரக்கர் கோனை
நெறுநெறென வடர்த்திட்ட நிலையுந் தோன்றும்
போருருவக் கூற்றுதைத்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே. (11

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்திநாயனார்

## திருக்கடவூர்மயானம்

பண்-பழம்பஞ்சுரம் இராகம்-சங்கராபரணம்

சிவனுருவம்

திருச்சிற்றம்பலம்

மருவார் கொன்றை மதிசூடி மாணிக்கத்தின் மலைபோல
வருவார் விடைமேன் மாதோடு மகிழ்ந்து பூதப்படைசூழத்
திருமால் பிரம னிந்திரற்குந் தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமானடிகளே.

விண்ணோர் தலைவர் வெண்புரிநூன் மார்பர்வேதகீதத்தர்
கண்ணார் நுதலர் நகுதலையர் கால காலர் கடவூர
ரெண்ணார் புரமூன்றெரிசெய்தவிறைவரிமையோரொருபாகம்
பெண்ணா ணாவர் மயானத்துப் பெரி பெருமா னடிகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயும் புலியி னதளுடையர் கண்ட ரெண்டோட் கடவூரர்
தாயுந் தந்தை பல்லுயிர்க்குந் தாமே யாய தலைவனார்
பாயும் விடையொன் றதுவேறிப் பலிதேர்ந்துண்ணும்பரமேட்டி
பேய்கள் வாழும் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.

நறைசேர்மலசைங்ணையானைநயனத்தீயாற் பொடி செய்த
விறையா ராவ ரெல்லார்க்கு மில்லை யென்னா தருள்செய்வார்
பறையார் முழவம் பாட்டோடுபயிலுந் தொண்டர்பயில் கடவூர்
பிறையார் சடையார் மயானத்துப் பெரியபெருமானடிகளே.

கொத்தார் கொன்றை மதிசூடிக் கோணா கங்கள் பூணாக
மத்த யானை யுரிபோர்த்து மருப்பு மாமைத் தாலியார்
பத்தி செய்து பாரிடங்கள் பாடி யாடிப் பலிகொள்ளும்
பித்தர் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.

துணிவார் கீளுங் கோவண முந்துதைந்து சுடலைப் பொடியணிந்து
பணிமே லிட்ட பாசுபதர் பஞ்ச வடிமார் பினர்கடவூர்த்
திணிவார் குழையார் புரமூன்றுந் தீவாய்ப்படுத்த சேவகனார்
பிணிவார் சடையார் மயானத்துப் பெரிய பெருமானடிகளே.

காரார் கடலி னஞ்சுண்ட கண்டர் கடவூ ருறைவாணர்
தேரா ரரக்கன் போய்வீழ்ந்து சிதைய விரலா லூன்றினா
ரூர்தா னாவ துலகேழு முடையார்க் கொற்றி யூராரூர்
பேரா யிரவர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.

வாடாமுலையா டன்னோடுமகிழ்ந்து கானில் வேடுவனாய்க்
கோடார் கேழற் பின்சென்று குறுகி விசயன் றவமழித்து
நாடா வண்ணஞ் செருச்செய்து வாவ நாழிநிலையருள் செய்
பீடார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேழ முரிப்பர் மழுவாளர் வேள்வி யழிப்பர் சிரமறுப்ப
ராழி யளிப்ப ரரிதனக்கு வானஞ் சுகப்ப ரறமுரைப்ப
ரேழை தலைவர் கடவூரி லிறைவர் சிறுமான் மறிக்கையர்
பேழைச் சடையர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.

மாட மல்கு கடவூரின் மறையோ ரேத்து மயானத்துப்
பீடை தீர வடியாருக் கருளும் பெருமா னடிகள்சீர்
நாடி நாவ லாரூர னம்பி சொன்ன நற்றமிழ்கள்
பாடு மடியார் கேட்பார்மேற் பாவ மான பறையுமே.

திருச்சிற்றம்பலம்

அகத்தியர் தேவாரத்திரட்டு

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

## திருவாழ்கொளிபுத்தூர்

பண் - தக்கராகம் இராகம் - காம்போதி

திருவடிகள்

திருச்சிற்றம்பலம்

பொடியுடை மார்பினர் போர்விடை யேறிப் பூதக ணம்புடைசூழக்
கொடியுடை யூர்திரிந் தையங் கொண்டு பலபல கூறி
வடிவுடை வாணெடுங் கண்ணுமை பாக மாயவன் வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமல ரிட்டுக் கறைமிடற் றானடி காண்போம். (1

அரைகெழுகோவணவாடையின்மேலோராடரவம்மசைத்தையம்
புரைகெழு வெண்டலை யேந்திப் போர்விடை யேறிப் புகழ
வரைகெழு மங்கைய தாகமோர் பாகமாயவன் வாழ்கொளி புத்தூர்
விரைகமழ் மாமலர் தூவி விரிசடை யானடி சேர்வோம். (2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூணெடு நாகம சைத்தன லாடிப் புன்றலை யங்கையி லேந்தி
யூணிடு பிச்சையூ ரையமுண்டியென் றுபல கூறி
வாணெடுங் கண்ணுமை மங்கையோர் பாக மாயவன் வாழ்கொளி புத்தூர்த்
தாணெடு மாமலரிட்டுத் தலைவனதாணிழல் சார்வோம். (3

தாரிடு கொன்றையோர் வெண்மதி கங்கை தாழ்சடைமேலவை சூடி
யூரிடு பிச்சைகொள் செல்வ முண்டியென் றுபல கூறி
வாரிடு மென்முலை மாதொரு பாக மாயவன் வாழ்கொளி புத்தூர்க்
காரிடு மாமலர்தூவிக் கறைமிடற் றானடி காண்போம். (4

கனமலர்க்கொன்றையலங்கலிலங்கக்காதிலோர் வெண்குழையோடு
புனமலர் மாலை புனைந்தூர் புகுதியென் றேபல கூறி
வனமுலைமாமலைமங்கையோர் பாகமாயவன்வாழ்கொளிபுத்தூ
ரினமல ரேய்ந்தன தூவி யெம்பெரு மானடி சேர்வோம். (5

அளைவளர் நாகம சைத்தன லாடி யலர்மிசை யந்தன னுச்சிக்
களைதலை யிற்பல் கொள்ளுங் கருத்தனே கள்வனே யென்னா
வளையொலிமுன்கைமடந்தையோர் பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தளையவிழ் மாமலர் தூவித் தலைவன தாளிணை சார்வோம் (6

அடர்செவி வேழத்தி னீருரி போர்த்து வழிதலை யங்கையி லேந்தி
யுடலிடு பிச்சையோ டையமுண்டியென் றுபல கூறி
மடனெடு மாமலர்க் கண்ணியோர் பாக மாயவன் வாழ்கொளி புத்தூர்த்
தடமல ராயின தூவித் தலைவன தாணிழல் சார்வோம். (7

உயர்வரையொல்கவெடுத்தவரக்கனொளிர்கடகக்கையடர்த்து
வயலிடு பிச்சையோ டைய மார்தலை யென்றடி போற்றி
வயல்வீரிநில நெடுங்கண்ணிபாகமாயவன் வாழ்வொளி புத்தூர்த்
சயவிரி மாமலர் தூவித் தாழ்சடை யானடி சார்வோம். (8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரியவனான்முகன்கைதொழுதேத்தக்காணலுஞ்சாரலுமாகா
வெரியுரு வாகியூ ரைய மிடுபலி யுண்ணயென் றேத்தி
வரியர வல்குன் மடந்தையோர் பாகமாயவன் வாழ்கொளி புத்தூர்
விரிமல ராயின தூவி விகிர்தன சேவடி சேர்வோம். (9

குண்டமணர் துவர்க்கூறைகண்மெய்யிற்கொள்கையினார்புறங்கூற
வெண்டலை யிற்பலி கோடல் விரும்பினை யென்று விளம்பி
வண்டமர்பூங்குழன்மங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தொண்டர்கண் மாமலர் தூவத் தோன்றநின் றானடி சேர்வோம். (10

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசுநாயனார்

# திருவடித்திருத்தாண்டகம்

## இராகம் - அரிகாம்போதி

திருவடிகள்

திருச்சிற்றம்பலம்

அரவணையான் சிந்தித் தரற்றும்படி
யருமறையான் சென்னிக் கணியமாடி
சரவணத்தான் கைதொழுது சாரும்மடி
சார்ந்தார்கட் கெல்லாஞ் சரணாமடி
பரவுவார் பாவம் பறைக்கும்படி
பதினெண் கணங்களும் பாடும்மடி
விரவுநீர்த் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி.

கொடுவினையா ரென்றுங் குறுகாவடி
குறைந் தடைந்தா ராழைமைக் காக்கும்மடி
படுமுழவம் பாணி பயிற்றும்மடி
பதைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தவடி
கடுமுரணே றூர்ந்தான் கழற்சேவடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்வையந் காப்பான் கருதும்மடி
நெடுமதியங் கண்ணி யணிந்தானடி
நிறைகெடில வீரட்ட நீங்காவடி.

வைதெழுவார் காமம்பொய் போக்காவடி
வஞ்சவலைப் பாடொன் றில்லாவடி
கைதொழு நாமேந்திக் காணும்மடி
கணக்கு வழக்கைக் கடந்தவடி
நெய்தொழுது நாமேந்தி யாட்டும்மடி
நீள்விசும்பை யூடறுத்து நின்றவடி
தெய்வப் புனற்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி.

அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும்மடி
யழகெழுத லாகா வருட்சேவடி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்தவடி
சோமனையுங் காலனையுங் காய்ந்தவடி
பெரும்பித்தர் கூடிப் பிதற்றும்மடி
பிழைத்தார் பிழைப்பறிய வல்லவடி
திருந்துநீர்த் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத் தெஞ் செல்வன்னடி.

ஒருகாலத் தொன்றாகி நின்றவடி
யூழிதோ றூழி யுயர்ந்தவடி
பொருகழலும் பல்சிலம்பு மார்க்கும்மடி
புகழ்வார் புகழ்தகைய வல்லவடி
யிருநிலத்தா ரின்புற்றங் கேத்தும்மடி
[illegible]புற்றா ரிட்டபூ [illegible]ரும்மடி
திருவதிகைத் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானந்தெஞ் செல்வன்னடி.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமூர்த்திநாயனார்

## திருப்புன்கூர்

பண் - தக்கேசி இராகம் - காம்போதி

திருவடிகள்

திருச்சிற்றம்பலம்

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
வவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்ற னாருயி ரதனை
வவ்வினா யுன்றன் வண்மைகண் டடியே
னெந்தை நீயெனை நமன்றமர் நலியி
னிவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தை யால்வந்துன் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (1

வையக முற்று மாமழை மறந்து
வயலி னீரிலை மாநிலந் தருகோ
முய்யக் கொள்கமற் றெங்களை யென்ன
வொளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளுஞ்
செய்கை கண்டுநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (2

ஏத நன்னில மீரறு வேலி
யேயர் கோனுற்ற விரும்பிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக்
கோல வெண்மணற் சிவன்றன்மேற் சென்ற
தாதை தாளற வெறிந்தசண் டிக்குன்
சடைமி சைமல ரருள்செயக் கண்டு
பூத வாளிநின் பொன்னடி யடைந்தேன்
பூம்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்ற மிழ்வல்ல ஞானசம் பந்த
னாவீனுக் கரைய னாளைப்போ வானுங்
கற்ற சூதுனற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங்
கொள்கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்
பொற்றி ரண்மணிக் கமலங்கண் மலரும
பொய்கை சூழ்திருப் புன்கூரு ளானே. (4

கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோள ரவுசுற் றிக்கடைந் தெழுந்த
வால நஞ்சுகண் டவர்மிக வீரிய
வமரர் கட்டகருள் புரிவது கருதி
நீல மார்கடல் விடந்தனை யுண்டு
கண்டத் தேவைத்த பித்துநீ செய்த
சீலங் கண்டுநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிரு புன்கூரு ளானே. (5

இயக்கர் கின்னார யமனொடு வருண
ரியங்கு தீவளி ஞாயிறு திங்கண்
மயக்க மில்புலி வானர நாகம்
வசுக்கள் வானவர் தானவ ரெல்லா
மயர்ப்பொன் றின்றிநின் றிருவடி யதனை
யர்ச்சித் தார்பெறு மாரருள் கண்டு
திகைப்பொன் றின்றிநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிரு புன்கூரு ளானே. (6

போர்த்த நீள்செவி யாளரந் தணர்க்குப்
பொழில்கொ ளானிழற் கீழறம் புரிந்து
பார்த்த னுக்கன்று பாசுப தங்கொடுத்
தருளி னாய்பண்டு பகீரதன் வேண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்து வந்திழி யும்புனற் கங்கை
நங்கை யாளைநின் சடைமிசைக் கரந்த
தீர்த்த னெநின்றன் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (7

மூவெயில் செற்றஞான் றுய்ந்த மூவரி
லிருவர் நின்றிருக் கோயிலின் வாயில்
காவ லாளரென் றேவிய பின்னை
யொருவ னீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநட மகிழ
மணிமு ழாமுழக் கவருள் செய்த
தேவ தேவநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (8

அறவி னான்மிக்க வறுவகைச் சமய
மவ்வ வர்க்கங்கே யாரருள் புரிந்து
வெறியு மாகட லிலிங்கையர் கோனைத்
துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்
குறிகொள் பாடலி னின்னிசை கேட்டுக்
கோல வாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் றிருவடி யடைந்தேன
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (9

கம்ப மால்களிற் றின்னுரி யானைக்
காமற் காய்ந்ததோர் கண்ணுடை யானைச்
செம்பொ னேயொக்குந் திருவுரு வானைச்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானை
யும்ப ராளியை யுமையவள் கோனை
யூரன்வன்றொண்ட னுள்ளத் தாலுகந்
தன்பி னாற்சொன்ன வருந்தமி ழைந்தோ
டைந்தும் வல்லவ ரருவினை யிலரே. (10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

## திருப்பூந்தராய்

பண் - கந்தாரபஞ்சமம்　　　　இராகம் - கேதாரகௌளை

அருச்சனை

திருச்சிற்றம்பலம்

பந்து சேர்விர லாள்பவ ளத்துவர்
　　வாயி னாள்பனி மாமதி போன்முகத்
தந்த மிர்புக ழாண்மலை மாதொடு
　　மாதிப்பிரான்
வந்து சேர்விடம் வானவ ரெத்திசை
　　யுந்நிறைந் துவலஞ் செய்து மாமலர்
புந்தி செய்திறைஞ் சிப்பொழி பூந்தராய்
　　போற்றுதுமே. (1

காவி யங்கருங் கண்ணி னாள்கனித்
　　தொண்டை வாய்க்கதிர் முத்தநல் வெண்ணகைத்
தூவி யம்பெடை யன்ன நடைச்சுரி
　　மென்குழலா
டேவி யுந்திரு மேனியோர் பாகமா
　　யொன்றி ரண்டிரு மூன்றொடு சேர்பதி
பூவி லந்தண னொப்பவர் பூந்தராய்
　　போற்றுதுமே. (2

பைய ராவரு மல்குன் மெல்லியல்
　　பஞ்சின் னேரடி வஞ்சிகொ னுண்ணிடைத்
தைய லாளொர பாலுடை யெம்மிறை
　　சாருமிடஞ்
செய்யெ லாங்கழு நீர்கம வம்மலர்த்
　　தேற லூறலிற் சேறுல ராதநற்
பொய்யி லாமறை யோர்பயில் பூந்தராபோற்றுதுமே. (3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளி நாண்முகை மொட்டியல் கோங்கி
னரும்பு தென்கொள் குரும்பைமூ வாமருந்
துள்ளி யன்றபைம் பொற்கல சத்திய
லொத்தமுலை
வெள்ளி மால்வரை யன்னதோர் மேனியின்
மேவி னார்பதி வீமரு தண்பொழிற்
புள்ளி னந்துயின் மல்கிய பூந்தராய்
போற்றுதுமே. (4

பண்ணி யன்றெழு மென்மொழி யாள்பகர்
கோதை யேர்திகழ் பைந்தளிர் மேனியோர்
பெண்ணி யன்றமொய்ம் பிற்பெரு மாற்கிடம்
பெய்வளையார்
கண்ணி யன்றெழு காவிச் செழுங்கரு
நீல மல்கிய காமர வாவிநற்
புண்ணி யருறை யும்பதி பூந்தராய்
போற்றுதுமே. (5

வாணி லாமதி போனுத லாண்மட
மாழை யொண்கணாள் வண்டா ளந்நகை
பாணி லாவிய வின்னிசை யார்மொழிப்
பாவையொடுஞ்
சேணி லாத்திகழ் செஞ்சடை யெம்மண்ணல்
சேர்வ துசிக ரப்பெருங் கோயில்சூழ்
போணி லாநுழை யும்பொழிற் பூந்தராய்
போற்றுதுமே. (6

காரு லாவிய வார்குழ லாள்கயற்
கண்ணி னாள்புயற் காலொளி மின்னிடை
வாரு லாவிய மென்முலை யாண்மலை
மாதுடனாய்
நீரு லாவிய சென்னியன் மன்னி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகரு நாமமுந் நான்கு நிகழ்பதி
போரு லாவெயில் சூழ்பொழிற் பூந்தராய்
போற்றுதுமே. (7

காசை சேர்குழ லாள்கய லேர்தடங்
கண்ணி காம்பன தோட்கதிர் மென்முலைத்
தேசு சேர்மலை மாத மருந்திரு
மார்பகலத்
தீசன் மேவுமி ருங்கயி லையெடுத்
தானை யன்றடர்த் தானிணைச் சேவடி
பூசை செய்பவர் சேர்பொழிற் பூந்தராய்
போற்றுதுமே. (8

கொங்கு சேர்குழ லாணிழல் வெண்ணகைக்
கொவ்வை வாய்க்கொடி யேரிடை யாளுமை
பங்கு சேர்திரு மார்புடை யார்படர்
தீயுருவாய்
மங்குல வண்ணனு மாமல ரோனு
மயங்க நீண்டவர் வான்மிசை வந்தெழு
பொங்கு நீரின்மி தந்தநற் பூந்தராய்
போற்றுதுமே. (9

கலவ மாமயி லாரிய லாள்கரும்
பன்ன மென்மொழி யாள்கதிர் வானுதற்
குலவு பூங்குழ லாளுமை கூறனை
வேறுரையா
லலவை சொல்லுவார் தேரம ணாதர்க
ளாக்கி னான்றனை நண்ணலு நல்குநற்
புலவர் தாம்புகழ் பொற்பதி பூந்தராய்
போற்றுதுமே. (10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேம்ப னுண்ணிடை யாளசெழுஞ் சேலன்
கண்ணியோ டண்ணல் சேர்வீடம் தேனமர்
பூம்பொ ழிறிகழ் பொற்பதி பூந்தராய்
போற்றுதுமென்
றோம்பு தன்மையன் முத்தமஜிழ் நான்மறை
ஞான சம்பந்த னொண்டமிழ் மாலைகொண்
டாம்ப டியிவை யேத்தவல் லார்க்கடை
யாவினையே. (11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு நாயனார்

## ஸ்ரீ கயிலாயம்

திருத்தாண்டகம் இராகம் - அரிகாம்போதி

அருச்சனை

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே யாளென்னைக் கொண்டாய் போற்றி
யூற்றாகி யுள்ளே யொளித்தாய் போற்றி
யோவாத சத்தத் தொலியே போற்றி
யாற்றாகி யங்கே யமர்ந்தாய் போற்றி
யாறங்க நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (1

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாட னன்று முகந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சாக நாகமசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (2

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
யுருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
யுள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப்படுவாய் போற்றி
கருவாகி யோடு முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (3

வானத்தார் போற்று மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
யூனத்தை நீக்கு முடலே போற்றி
யோங்கி யழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாடலுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (4

ஊராகி நின்ற வுலகே போற்றி
யோங்கி யழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பேராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வாரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (5

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்ந்தாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லயிராய்ப் பார்தோறு நின்றாய் போற்றி
பற்றி யுவகை வீடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (6

பண்ணி னிசையாகி நின்றாய போற்றி
பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
யெண்ணு மெழுத்துஞ்சொல் லானாய் போற்றி
யென்சிந்தை நீங்கா விறைவா போற்றி
வீண்ணு நிலனுந் தீயானாய் போற்றி
மேலவர்க்கு மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயில மலையானே போற்றி போற்றி. (7

இமையா துயிரா திருந்தாய் போற்றி
யென்சிந்தை நீங்கா விறைவா போற்றி
யுமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
யூழியா ழான வொருவா போற்றி
யமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
யாதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (8

மூவாய் பிறவா யிறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் கொழுந்தே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
யாவா யடியேனுக் கெல்லாம் போற்றி
யல்ல னலிய வலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள மகல முடையாய் போற்றி
யடிய முடியு மில்லி போற்றி
யங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்ற முதைத்தாய் போற்றி
கோயிலா வென்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய வுருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (10

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
யோதாதே வேத முணர்ந்தாய் போற்றி
யெண்ணா விலங்கைக்கோண் றன்னைப் போற்றி
யிறைவிரலால் வைத்துகந்த வீசா போற்றி
பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (11

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி நாயனார்

## திருக்கழுக்குன்றம்

பண் - நட்டபாடை இராகம் - கொம்பீரநாட்டை

அருச்சனை

திருச்சிற்றம்பலம்

கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்ற பாவ வினைக டாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் றேவர்பி ரானிடங்
கன்றி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. (1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கிச் சென்று தொழுமி னின்னிசை பாடியே
பிறங்கு கொன்றைச் சடைய னெங்கள் பிரானிடம்
நிறங்கள் செய்த மணிக ணித்திலங் கொண்டிழி
கறங்கு வெள்ளை யருவித் தண்கழுக் குன்றமே. (2

நீள நின்று தொழுமி னித்தலு நீதியா
லாளு நம்ம வினைக ளல்கி யழிந்திடத்
தோளு மெட்டு முடைய மாமணிச் சோதியான்
காள கண்ட னுறையுந் தண்கழுக் குன்றமே. (3

வெளிறு தீரத் தொழுமின் வெண்பொடி யாடியை
முளிறி லங்குமழு வாளன் முந்திய றைவிடம்
பிளிறு தீரப் பெருங்கைப் பெய்மத மூன்றுடைக்
களிறி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. (4

புலைக டரத் தொழுமின் புன்சடைப் புண்ணிய
னிலைகொள் சூலப் படைய னெந்தை பிரானிட
முலைக ளுண்டு தழுவிக் குட்டியொ டுமுசுக்
கலைகள் பாயும் புறவிற் றண்கழுக் குன்றமே. (5

மடமு டைய வடிவார் தம்மனத் தேயுற
விடமு டைய மிடறன் விண்ணவர் மேலவன்
படமு டைய வரவன்றான் பயிலு மிடங்
கடமு டைய புறவிற் றண்கழுக் குன்றமே. (6

ஊன மில்லா வடியார் தம்மனத் தேயுற
ஞான மூர்த்தி நட்ட மாடி நவிலுமிடந்
தேனும் வண்டு மதுவுண் டின்னிசை பாடியே
கான மஞ்ஞை யுறையுந் தண்கழுக் குன்றமே. (7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மில்லா வடிவார் தம்மனத் தேயுற
வந்து நாளும் வணங்கி மாலொட நான்முகன்
சிந்தை செய்த மலர்க ணித்தலுஞ் சேரவே
சந்த நாறும் புறவிற் றண்கழுக் குன்றமே. (8

பிறைக டரத் தொழுமின் புன்சடை பிஞ்ஞகன்
குழைகொள் காதன் குழகன் றானுறை யும்மிட
மழைகள் சாலக் கலித்து நீடுயர் வேயவை
குழைகொண் முத்தங்சொரியுந் தண்கழுக் குன்றமே. (9

பல்லில் வெள்ளைத் தலையன் றான்பயி லும்மிடங்
கல்லில் வெள்ளை யருவித் தண்கழக் குன்றினை
மல்லின் மல்க திரடோ ரூரன் வனப்பினாற்
சொல்லால் சொல்லித் தொழுவாரைத் தொழுமின்களே. (10

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

## கோளறு திருப்பதிகம்

பண் - பியந்தைக்காந்தாரம் இராகம் - நவரோஸ்

அடிமை

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தெ
னுளமேபு குந்தவதனாள்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
யாசறு நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்கமிகவே. (1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பொடு கொம்பொடாமை யிவைமார்பி லங்க
வெருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தெ
னுளமெபு குந்தவதனா
லொன்பதோ டொன்றொடேழு பதினெட்டொ டாறு
முடனாயநாள்க ளவைதா
மன்பொடு நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே, (2

உருவளர் பவளமேனி யொளிநீ றணிந்து
வுமையோடும் வெள்ளைவிடைமேன்
முருகலர் கொண்றைதிங்கண் முடிமே லணிந்தெ
னுளமேபு குந்தவதனாற்
றிருமகள் கலையதூர்தி சயமாது பூமி
திசைதெய்வ மானபலவு
மருநெதி நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடிவார வர்க்குமிகவே. (3

மதிநுதன் மங்கையோடு வடபாலி ருந்து
மறையோது மெங்கள்பரம
னதியொடு கொன்றைமாலை முடிமேல ணிந்தெ
னுளமேபு குந்தவனாற்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க் ளானபலவு
மதிகுண நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடிவார வர்க்குமிகவே. (4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சணி கண்ட னெந்தை மடவாட னோடு
விடையேறு மெங்கள்பரமன்
றுஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல ணிந்தெ
னுளமேபு குந்தவதனாற்
வெஞ்சின வவுணரோடு முருமிடியு மின்னு
மிகையான பூதமவையு
மஞ்சிடு நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே. (5

வாள்வரி யதளதாடை வரிகோவ ணத்தர்
மடவாட னோடுமுடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தெ
னுளமேபு குந்தவதனாற்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடுகரடி
யாளரி நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே. (6

செப்பிள முலைநன் மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வனடைவா
ரொப்பிள மதியுமப்பு முடிமே லணிந்தெ
னுளமேபு குந்தவதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்துநலியா
வப்படி நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே. (7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்பட விழிசெய்தன்று விடைமேலி ருந்து
மடவாட னோடுமுடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெ
னுளமேபு குந்தவதனா
லேழ்கடல் சூழிலங்கை யரையன் றனோடு
மிடரான வந்துநலியா
வார்கட னல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே. (8

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள்பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல ணிந்தெ
னுளமேபு குந்தவதனான்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்
வருகால மானபலவு
மலைகடன் மேருநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே. (9

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய வேடவிகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமேல ணிந்தெ
னுளமேபு குந்தவதனாற்
புத்தரொ டமனைவாதி லழிவிக்கு மண்ண
றிருநீறு செம்மைதிடமே
யத்தகு நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடிவார வர்க்குமிகவே. (10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெ றுன்னி
வளர்செம்பொ னெங்குநிகழ
நான்முக னாதியாய பிரமாபு ரத்து
மறைஞான ஞானமுனிவன்
றானுறு கொளுநாளு மடியாரை வந்து
நலியாத வண்ணமுரைசெய்
யானசொன் மாலையோது மடியார்கள் வானி
லரசாள்வ ரானைநமதே. (11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு நாயனார்

## திருவாரூர்த் திருவிருத்தம்

பண் - கொல்லி

அடிமை

திருச்சிற்றம்பலம்

குலம்பலம் பாவரு குண்டர்முன் னேநமக் குண்டுகொலோ
வலம்பலம் பாவரு தண்புன லாரூ ரவிர்சடையான்
சிலம்பலம் பாவரு சேவடி யான்றிரு மூலட்டானம்
புலம்பலம் பாவரு தொண்டர்க்குத் தொண்டராம்
புண்ணியமே. (1

மற்றிட மின்றி மனைதுறந் தல்லுணா வல்லமணர்
சொற்றிட மென்று துரிசுபட் டேனுக்கு முண்டுகொலோ
விற்றிடம் வாங்கி விசயனொ டன்றொரு வேடுவனாய்
பற்றிடங் கொண்டான்றன் றொண்டர்க்குத் தொண்டராம்
புண்ணியமே. (2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவடி வின்றி நின்றுண்குண்டர் முன்மைக் குண்டுகொாலோ
செருவடி வெஞ்சிலை யாற்புர மட்டவன் சென்றடையாத்
திருவுடை யான்றிரு வார்த் திருமூலம் டானன்செங்கட்
பொருவிடை யானடித் தொண்டர்க்குத் தொண்டராம்
புண்ணியமே. (3

மாசினையேறியமேனியர்வன்கண்ணர்மொண்ணரைவிட்
டீசனை யேநினைந் தேசறு வேனுக்க முண்டுகொலோ
தேசனை யாரூர்த் திருமூலட் டானனைச் சிந்தைசெய்த
பூசனைப் பூசுரர் தொண்டர்க்குத் தொண்டராம்
புண்ணியமே. (4

அருந்தும் பொழுதுரை யாடா வமணர் திறமகன்று
வருந்தி நினைந்தர னேயன்றுவாழ்த்துவேற்குண்டுகொலோ
திருந்திய மாமதி லாரூர்த் திருமூலட் டானனுக்குப்
பொருத்துந் தவமுடைத் தொண்டர்க்குத் தொண்டராம்
புண்ணியமே. (5

வீங்கிய தோள்களுந் தாள்களுமாய்நின்று வெற்றரையே
மூங்கைகள் போலுண்ணுமுடர்முன்னேநமக்குண்டுகொலோ
தேங்கமழ் சோலைத்தென் னாரூர்த்திருமூலட்டானன்செய்ய
பூங்கழ லானடித் தொண்டர்க்குத் தொண்டராம்
புண்ணியமே. (6

பண்ணிய சாத்திரப் பேய்கள் பறிதலைக் குண்டரைவிட்
டெண்ணில்புகழீசன்றன்னருள் பெற்றேற்கு முண்டுகொலோ
திண்ணிய மாமதி லாரூர்த் திருமூலட் டானனெங்கள்
புண்ணியன் றன்னடித் தொண்டர்க்குத் தொண்டராம்
புண்ணியமே. (7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரப்பர்கண் மெய்யைத் தலைபறிக் கச்சுகமென்னுங்குண்ட
ருரைப்பன கேளாதிங் குய்யப்போந்தேனுக்குமுண்டுகொலோ
திருப்பொலி யாரூர்த் திருமூலட் டானன் றிருக்கயிலைப்
பொருப்பன் விருப்பமர் தொண்டர்க்குத் தொண்டராம
புண்ணியமே. (8

கையி லிடுசோறு நின்றுண்ணுங் காத லமணரைவிட்
டுய்யு நெறிகண்டிங் குய்யப்போந்தேனுக்குமுண்டுகொலோ
வைய னணிவய லாரூர்த் திருமூலட் டானனுக்குப்
பொய்யன் பிலாவடித் தொண்டர்க்குத் தொண்டராம்
புண்ணியமே. (9

குற்ற முடைய வமணர் திறமது கையகன்றிட்
டுற்ற கருமஞ்செய் துய்யப்போந் தேனுக்கு முண்டுகொலோ
மற்பொலி தோளா னிராவணன் றன்வலி வாட்டுவித்த
பொற்கழ லானடித் தொண்டர்க்குத் தொண்டராம்புண்ணியமே.
(10

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி நாயனார்

## திருத்தொண்டர்தொகை

பண் - கொல்லிக்கௌவாணம் இராகம் - நவரோஸ்

அடிமை

திருச்சிற்றம்பலம்

தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியே
னில்லையே யென்னாத வியற்பகைக்கு மடியே
னிளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியே
னல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலைமலிந்த வேனம்பி யெறிபத்தற் கடியே
னேனாதி நாதன்ற னடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலையன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளன் மானக்கஞ் சாற
னெஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியே
னலைமலிந்த புனல்மங்கை யானாயற் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (2

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவதாற்கு மடியேன்
றிருக்குறிப்புத்தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்
மெம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதையை மழுவினா லெறிந்த
வம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன்
பெருநம்பி குலச்சிறைத னடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயர்க்கு மடியே
னொருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியே
னொலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியே
னருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்பறா வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா
வெம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியே
னேயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியே
னம்பிரான் றிருமூல னடியார்க்கு மடியே
னாட்டமிகு தண்டிக்க மூர்க்கற்கு மடியே
னம்பிரான் சோமாசி மாறனுக்கு மடியே
னாரூர னாரூரி லம்மனுக் காளே. (5

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாத கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டங் குடிமெய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக் கழறிற் றறிவார்க்கு மடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியே
னார்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (6

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியா னரசிங்க முனையரையற் கடினே்
விரிதிரைசூழ் கடனாகை யதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியே
னையடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியே
னிறைக்கொண்ட சிந்தையா னெல்வேலி வென்ற
நின்றிசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
றுறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியே
னறைக்கொண்ட வேனம்பி முனையடுவாற் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (8

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாஞ்செருத்துணைதன் னடியார்க்குமடியேன்
புடைசூழ்ந்த புலியதண்மே லரவாட வாடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்குமடியே
னடல்சூழ்ந்த வேனம்பி கோட்புலிக்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (9

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
றிருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியே
னப்பாலு மடிசார்ந்த வடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாண் மானிக்கு நேசனுக்கு மடியேன்
றென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
றிருநீல கண்டத்துப் பாணனார்க் கடியே
னென்னவனா மரனடியே யடைந்திட்ட சடையே
னிசைஞானி காதலன் றிருநாவ லூர்க்கோ
னன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் கன்பரா வாரே. (11

திருச்சிற்றம்பலம்

## அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றிற்று

## யாத்திரைப் பத்து

பூ ஆர் சென்னி மன்னன் எம்
புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவாது உள்ளம் கலந்து உணர்வு ஆய்
உருக்கும் வெள்ளக் கருணையினால்
ஆ! ஆ! என்னப் பட்டு அன்பு ஆய்
ஆட்பட்டீர் வந்து ஒருப்படுமின்
போவோம் காலம் வந்தது காண்
பொய் விட்டு உடையான் கழல் புகவே. 1

புகவே வேண்டாம் புலன்களில் நீர்
புயங்கப் பெருமான் பூம் கழல்கள்
மிகவே நினைமின் மிக்க எல்லாம்
வேண்டா போக விடுமின்கள்
நகவே ஞாலத்து உள் புகுந்து
நாயே அனைய நமை ஆண்ட
தகவே உடையான் - தனைச் சாரத்
தளராது இருப்பார் தாம்தாமே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமே தமக்குச் சுற்றமும்
　　　　தாமே தமக்கு விதி வகையும்
நாம் ஆர் எமது ஆர் பாசம் ஆர்
　　　　என்ன மாயம் இவை போக
கோமான் பண்டைத் தொண்டரொடும்
　　　　அவன் - தன் குறிப்பே குறிக்கொண்டு
போம் ஆறு அமைமின் - பொய் நீக்கி
　　　　புயங்கன் ஆள்வான் பொன் அடிக்கே. 3

அடியார் ஆனீர் எல்லீரும்
　　　　அகலவிடுமின் விளையாட்டை
கடிசேர் அடியே வந்து அடைந்து
　　　　கடைக்கொண்டு இருமின் திருக் குறிப்பை
செடி சேர் உடலைச் செல நீக்கி
　　　　சிவலோகத்தை நமை வைப்பான்
பொடி சேர் மேனிப் புயங்கன் - தன்
　　　　பூ ஆர் கழற்கே புகவிடுமே. 4

விடுமின் வெகுளி வேட்கை நோய்
　　　　மிகவோர் காலம் இனி இல்லை
உடையான் அடிக்கீழ் பெரும் சாத்தோடு
　　　　உடன் போவதற்கே ஒருப்படுமின்
அடைவோம் நாம் போய்ச் சிவபச்புரத்துள்
　　　　அணி ஆர் கதவு - அது அடையாமே
புடைப்பட்டு உருகிப் போற்றுவோம்
　　　　புயங்கன் ஆளவான் புகழ்களையே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்மின் தொழுமின் பூப் புனைமின்
புயங்கன் தாளே புந்தி வைத்திட்டு
இகழ்மின் எல்லா அல்லலையும்
இனி ஓர் இடையூறு அடையாமே
திகழும் சீர் ஆர் சிவபுரத்துச்
சென்று சிவன் தாள் வணங்கி நாம்
நிகழும் அடியார் முன் சென்று
நெஞ்சம் உருகி நிற்போம். 6

நிற்பார் நிற்க நில்லா உலகில்
நில்லோம் இனி நாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாம் திருமேனிப்
புயங்கன் ஆள்வான் பொன் அடிக்கே
நிற்பீர் எல்லாம் தாழாதே
நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தால்
பெறுதற்கு அரியன் பெருமானே. 7

பெருமான் பேர் - ஆனந்தத்துப்
பிரியராது இருக்கப் பெற்றீர்காள்
அரு மால் உற்றுப் பின்னை நீர்
அம்மா அழுங்கி அரற்றாதே
திரு மா மணி சேர் திருக் கதவம்
திறந்தபோதே சிவபுரத்து
திருமால் அறியாத் திருப் புயங்கன்
திருத் தாள் சென்று சேர்வோமே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதி சிந்தனையைத்
திருந்த வைத்து சிந்திமின்
போரில் பொலியும் வேல் கண்ணாள்
பங்கன் புயங்கன் அருள் அமுதம்
ஆரப் பருகி ஆராத
ஆர்வம் கூர அழுந்துவீர்
போரப் புரிமின் சிவன் கழற்கே
பொய்யில் கிடந்து புரளாதே. 9

புரள்வார் தொழுவார் புகழ்வார் ஆய்
இன்றே வந்து ஆள் ஆகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பார் ஆர்
மதியுள் கலங்கி மயங்குவீர்
தெருள்வீர் ஆகில் இது செய்மின்
சிவலோகக் கோன் திருப்புயங்கன்
அருள் ஆர் பெறுவார் அகல் இடத்தே
அந்தோ! அந்தோ! அந்தோவே! 10

## கந்தரனுபூதி காப்பு

நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்து உருகத்
தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல்சேர்
செஞ் சொல் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக்கர ஆனைபதம் பணிவாம்.

### நூல்

ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியானைச் சகோதரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உல்லாச நிராகுல யோகவிதச்
சல்லாப விநோதனும் நீயலையோ
எல்லாம் அற என்னை இழந்த நலம்
சொல்லவாய் முருகா ! சுரபூபதியே.

வானோ புனல்பார் கனல் மாருதமோ
ஞானோதயமோ நவில் நான்மறையோ
யானோ மனமோ எனை ஆண்டஇடம்தானோ
பொருளாவது சண்முகனே.

வளைபட்ட கைம்மா தொடுமக்கள் எனும்
தளைபட்டு அழியத் தகுமோ தகுமோ
கிளைபட்டு எழுசூர் உரமும் கிரியும்
தொளைபட்டு ருவத்தொடு வேலவனே.

மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறும் ஒழிந்தும் ஒழிந்திலனே்
அகமாயை மடந்தையர் என்று அயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே.

திணியான மனோசிலை மீது உனதாள்
அணியாள் அரவிந்தம் அரும்பும் அதோ
பணியா என வள்ளி பதம்பணியும்
தணியா அதிமோக தயாபரனே.

கெடுவாய் மனனே! கதிகேள் கரவா
இடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவேதனை தூள்படவே்
விடுவாய் விடுவாய் வினையாவையுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரும் பதிகேள் அகமாம் எனும் இப்
பிமரம்கெட மெய்ப்பொருள் பேசியவா!
குமரன் கிரிராசகுமாரி மகன்
சமரம் பொரு தானவ நாசகனே.

மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டுசல் படும் பரி சென்று ஒழிவேன்
தட்டுடு அற வேல்சயிலத் தெறியும்
நிட்டூர நிராகுல நிர்ப்பயனே.

கார்மா மிசை காலன் வரின் கலபத்
தேர்மாமிசை வந்து எதிரப் படுவாய்
தார்மார்ப! வலாரி தலாரி எனும்
சூர்மா மடியத் தொடு வேலவனே.

கூகா என என்கிளை கூடி அழப்
போகாவகை மெய்ப்பொருள் பேசியவா!
நாகாசல! வேலவ! நாலுகவித்
தியாகா! சுரலோக சிகாமணியே.

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இருசொல்அற என்றலுமே
அம்மா பொருகளாளன்று மடிந்திலேனே.

முருகன் தனிவேல் முனி நம் குரு என்று
அருள்கொண்டு அறியார் அறியும் தரமோ?
உருவன்று அருவன்று உளதன்று இலதன்று
இருளன்று ஒளியன்று என நின்றதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய் மனனே! ஒழிவாய் ஒழிவாய்
மெய் வாழி விழி நாசியொடும் செவியாம்
ஐவாய் வழிசெல்லும் அவாவினையே.

முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகும் செயல்தந்து உணர்வென்று அருள்வாய்
பொருபும் கவரும் புவியும் பரவும்
குரு புங்கவ! எண்குண பஞ்சரனே.

பேராசை எனும் பிணியில் பிணிபட்டு
ஓரா வினையேன் உழலத் தகுமோ
வீரா! முதுசூர் படவேல் எறியும்
சூரா! சுரலோக துரந்தரனே.

யாம் ஓதிய கல்வியும் எம்அறிவும்
தாமேபெற வேலவர் தந்ததனால்
பூமேல் மயல்போய் அறம் மெய்ப்புணர்வீர்!
நாமேல் நடவீர் நடவீர் இனியே.

உதியா மரியா உணரா மறவா
விதிமால் அறியா விமலன் புதல்வா
அதிகா அனகா அபயா அமரா
வதிகாவல! சூர பயங்கரனே.

வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடி போகியவர்
அடியந்தமிலா அயில்வேல் அரசே!
மிடியென்று ஒருபாவி வெளிப்படினே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதாகிய மெய்ப்பொருளுக்கு அடியேன்
உரிதா உபதேசம் உணர்த்தியவர்
விரிதாரண! விக்ரம! வேள்! இமையோர்
புரிதாரக! நாக புரந்தரனே.

கருதா மறவா நெறிகாண எனக்கு
இருதாள் வனசந்தர என்று இசைவாய்
வரதா! முருகா! மயில்வாகனனே!
விரதா! சுரசூர! விபாடணனே.

காளைக் குமரேசன் எனக் கருதித்
தாளைப் பணியத் தவம் எய்தியவர்
பாளைக் குழல் வள்ளி பதம்பணியும்
வேளைச் சுரபூபதி மேருவையை.

அடியைக் குறியாது அறியாமையினால்
முடியக் கெடவோ? முறையோ முறையோ?
வடிவிக்ரம வேல்மகிபா! குறமின்
கொடியைப் புணரும் குண பூதரனே.

கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேன் அருள் சேரவும் எண்ணுமதோ?
சூர்வேரொடு குன்று தொளைத்த நெடும்
போர்வேல! புரந்தர பூபதியே.

மெய்யே என வெவ்வினை வாழ்வை உகந்து
ஐயோ! அடியேன் அலையத் தகுமோ?
கையோ அயிலோ கழலோ முழுதும்
செய்யோய்! மயிலேறிய சேவகனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரம் இலேன் அருளைப் பெறவே
நீதான் ஒருசற்றும் நினைந்திலையே
வேதாகம! ஞான வினோத! மனோ
தீதா! சுரலோக சிகாமணியே.

மின்னே நிகர்வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயன் இங்கு இதுவோ?
பொன்னே! மணியே! பொருளே! அருளே!
மன்னே! மயிலேறிய வானவனே.

ஆனா அமுதே! அயில்வேல் அரசே!
ஞானாகரனே! நவிலத் தகுமோ?
யானாகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலைநின்றது தற்பரமே.

இல்லேயெனும் மாயையில் இட்டனை நீ
பொல்லேன் அறியாமை பொறுத்திலையோ
மல்லேபுரி பன்னிரு வாகுவில் என்
சொல்லே புனையும் சுடர் வேலவனே.

செவ்வான் உருவில் திகழ் வேலவன் அன்று
ஒவ்வாதது என உணர்வித்ததுதான்
அவ்வாறு அறியார் அறிகின்றதலால்
எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே.

பாழ்வாழ்வு எனும் இப்படு மாயையிலே
வீழ்வாய் என என்னை விதித்தனையே
தாழ்வானவை செய்தன தாம் உளவோ?
வாழ்வாய் இனி நீ மயில் வாகனனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையே பதறிக் கதறித் தலையூடு
அலையே படுமாறு அதுவாய் விடவோ?
கொலையே புரி வேடர்குலப் பிடி தோய்
மலையே! மலை கூறிடு வாகையனே.

சிந்தாகுல இல்லொடு செல்வம் எனும்
விந்தாடவி என்று விடப் பெறுவேன்
மந்தாகினி தந்த வரோதயனே!
கந்தா! முருகா! கருணாகரனே!

சிங்கார மடந்தையர் தீநெறிபோய்
மங்காமல் எனக்கு வரம் தருவாய்
சங்க்ராம சிகாவல! சண்முகனே!
கங்காநதி பால! க்ருபாகரனே.

விதிகாணும் உடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க்கழல் என்று அருள்வாய்
மதிவாள் நுதல் வள்ளியை அல்லது பின்
துதியா விரதா! சுரபூபதியே.

நாதா! குமரா! நம என்று அரனார்!
ஓதாய் என ஓதியது எப்பொருள்தான்?
வேதா முதல் விண்ணவர் சூடு மலர்ப்
பாதா! குறமின் பதசேகரனே.

கிரிவாய் விடுவிக்ரம வேல் இறையோன்
பரிவாரம் எனும் பதம் மேவலையே
புரிவாய் மனனே! பொறையாம் அறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தையையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாளியை ஒன்று அறியேனை அறத்
தீதாளியை ஆண்டது செப்புமதோ?
கூதாள! கிராதகுலிக்கு இறைவா!
வேதாளகணம் புகழ் வேலவனே.

மாவேழ் சனனம் கெட மாயை விடா
மூவேடனை என்று முடிந்திடுமோ?
கோவே! குற மின்கொடி தோள் புணரும்
தேவே! சிவசங்கர தேசிகனே.

வினையோட விடும் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கி?
சுனையோடு அருவித் துறையோடு பசுந்
தினையோடு இதனோடு திரிந்தவனே.

சாகாது எனையே சரணங்களிலே
காகா: நமனார் கலகம் செயுநாள்
வாகா! முருகா! மயில்வாகனனே!
யோகா! சிவஞானோப தேசிகனே.

குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவற்று உலகோடு உரைசிந்தையும் அற்று
அறிவற்று அறியாமையும் அற்றதுவே.

தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா! முருகா நினது அன்பு அருளாள்
ஆசா நிகளம் துகள் ஆயினபின்
பேசா அனுபூதி பிறந்ததுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும்படி தந்தது சொல்லுமதோ?
வீடும் சுரர்மாமுடி வேதமும் வெங்
காடும் புனமும் கமழும் கழலே.

கரவாகிய கல்வி உளார் கடை சென்று
இரவா வகை மெய்ப்பொருள் ஈகுவையோ?
குரவா! குமரா! குலிசாயுத! குஞ்
சரவா! சிவயோக! தயாபரனே.

எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்
கந்தா! கதிர்வேலவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறை நாயகனே.

ஆறாறையும் நீத்து அதன்மேல் நிலையைப்
பேறா அடியேன் பெறுமாறு உளதோ?
சீறா வருசூர் சிதைவித்து இமையோர்
கூறா உலகம் குளிர்வித்தவனே.

அறிவொன்று அற நின்று அறிவார் அறிவில்
பிறிவொன்று அறநின்ற பிரானலையோ?
செறிவொன்று அறவந்து இருளே சிதைய
வெறிவென்று அவரோடு உறும் வேலவனே.

தன்னம் தனிநின்று அதுதான் அறிய
இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ?
மின்னும் கதிர்வேல் விகிர்தா! நினைவார்
கின்னம் களையும் கிருபை சூழ் சுடரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிகெட்டு அறவாடி மயங்கி அறக்
கதிகெட்டு அவமே கெடவோ கடவேன்?
நதிபுத்திர! ஞானசுகாதிப! அத்
திதிபுத்திரர் வீறடு சேவகனே.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

## தாயுமானவர் பாடல்

இனியேனு தெமக்குனருள் வருமோ எனக்கருதி
ஏங்குதே நெஞ்சம் ஐயா!
இன்றைக் கிருந்தாரை நாளைக்கிருப்பரென்(று)
எண்ணவோ திடமில்லையே!
அனியாய மாய்இந்த உடலைநான் என்றுவரும்
அந்தகற் காளாகவோ!
ஆடித்திரிந்துநான் கற்றதுங் கேட்டதும்
அவலமாய்ப் போதல்நன்றோ!
கனியேனும் வறியசெங் காயேனும் உதிர்சருகு
கந்தமூ லங்களேனும்
கனல்வாதை வந்தெய்தின்அள்ளிப் புசிந்துநான்
கண்மூடி மௌனியாகித்
தனியே இருப்பதற்(கு) எண்ணினேன் எண்ணமிது
சாமிநீ அறியாததோ!
சர்வபரி பூரண அகண்ட தத்துவமான
சச்சிதானந்த சிவமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்,
கரடிவெம்புலி வாயையும் கட்டலாம்
ஒருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம்
கட்செவி எடுத்ததாட்டலாம்,
வெந்தழலின் இரதம்வைத்(து) ஐந்துலோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறெருவர் காணாமல் உலகத்துலாவலாம்,
விண்ணவரை ஏவல் கொளளலாம்,
சத்ததமும் இளமையோ(டு) இருக்கலாம்,
மற்றொரு சரீரத்திலும் புகுதலாம்,
சலமேல் நடக்கலாம், கனல்மேல் இருக்கலாம்,
தன்நிகரில் சித்திபெறலாம்,
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறமரிது, சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தோசே மயானந்தமே.

திருச்சிற்றம்பலம்

## இராமலிங்கசுவாமிகள் (வள்ளலார்) பாடல்

1. ஒருமையுடன் நினது திருவடி நினைக்கின்ற
உத்தமர் தம் - உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்ஒன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான
போய் பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும்
உனை மறவாது இருக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதி வேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலமேலங்கு கந்த வேளே
தண்மகந்துய்ய மணி உன்முகங் சைவமேனி
சண்முகந் தெய்வமணியே!

2. களக்கமறப் பொது நடநான் கண்டுகொண்டகுணம்
கடைச்சிறியோர் உளம்பூத்துக் காய்த்தது ஒருகாய்தான்
விளக்கமறப் பருந்திடுமோ வெம்பி உதிர்ந்திடுமோ வெம்பாது
பழுக்கினுமென் கரத்தில் அகப்படுமோ
கொளக்கருது மலமாயைக் குரங்கு கவர்ந்திடுமொ குரங்கு
கவராது என் குறிப்பிலகப்படினும்
துலக்கமற உண்ணுவெனே தொண்டை வீக்கிக்கொள்ளுமோ
சோதி திருவுளமெதுவோ ஏதும் அறிந்திலனே!

## திரிக்கடவூர்
# அபிராமியம்மை பதிகம்

### காப்பு

தூயதமிழ்ப் பாமாலை சூட்டுதற்கு மும்மதநூல்
வாயைக் கரன்றாள் வழுத்தபாம் - நேயர்நிதம்
எண்ணும் புகழ்க்கடவூர் எங்கள் அபி ராமவல்லி
நண்ணும்பொற் பாதத்தில் நன்கு.

### நூல்
### ஆசிரிய விருத்தம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
துன்பமில் லாத வாழ்வும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்

தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்

அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே!

காரளக பந்தியும் பந்தியின் அலங்கலும்
கரிய புருவச் சிலைகளும்
கர்ணகுண் டலமுமதி முகமண்ட லம்நுதற்
கஸ்தூரிப் பொட்டு மிட்டுக்

கூரணிந் திடுவிழியும் அமுதமொழியுஞ் சிறிய
கொவ்வையின் கனிய தரமும்
குமிழினைய நாசியும் முத்தநிகர் தந்தமும்
கோடுசோ டான களமும்

வாரணித் திறுமாந்த வனமுலையும் மேகலையும்
மணிநூ புரப்பா தமும்
வந்தெனது முன்னின்று மந்தகா சமுமாக
வல்வினையை மாற்று வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரமணி வானிலுறை தாரகைகள் போலநிறை
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே!

மகரவார் குழல்மேல் அடர்ந்துகமிழ் மீதினில்
மறைந்து வாளைத் துறந்து
மையக்கயலை வேண்டிநின் செங்கமல விழியருள்
வரம்பெற்ற பேர்க ளென்றோ?

செகமுழுமீ வொற்றைத் தனிகசுடை கவித்துமேற்
சிங்கா சனத்தி லுற்றுச்
செங்கோலும் மனுநீதி முறைமையும் பெற்றுமிகு
திகிரியுல காண்டு பின்பு

புகர்முகத் (து) ஐராவதப் பாக ராகிநிரை
புத்தேளிர் வந்து போற்றிப்
போக தேவேந்திரன் எனப்புகழ விண்ணில்
புலோமிசை யொடுஞ்சு கிப்பர்

அகரமுத லாகிவளர் ஆனந்த ரூபியே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே!

மறிகடல்கள் ஏழையுந் திகிரிஇரு நான்கையும்
மாதிறல் கரியெட் டையும்
மாநாகம் ஆனதையம் மாமேரு என்பதையும்
மாகூர்மம் ஆனதையு மோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறியரவு தாங்கிவரு புவனமீ ரேழையும்
புத்தேளிர் கூட்டத் தையும்
பூமகளை யுந்திகிரி மாயவனை யும்அரையிற்
புலியாடை உடையானையும்

முறைமுறைக ளாமீன்ற முதியவர்களாய்ப் பழைமை
முறைகள் தெரியாத நின்னை
மூவுலகி லுள்ளவர்கள் வாலையென் றறியாமல்
மொழிகின்ற தேது சொல்வாய்

அறிவுநிறை விழுமியர்தம் ஆனந்த வாரியே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அழுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே!

வாடாமல் உயிரெனும் பயிர்தழைத் தோங்கிவர
அருள்மழை பொழிந்தும் இன்ப
வாரிதியிலே நின்ன தன்பெனுஞ் சிறகால்
வருந்தா மலேய ணைத்துக்

கோடாமல் வளர்சிற் றெறும்புமுதல் குஞ்சரக்
கூட்டமுத லான சீவ
கோடிகள் தமக்குப் புசிக்கும் புசிப்பினைக்
குறையாம லேகொ டுத்து

நீடாழி யுலகங்கள் யாவையும் நேயமாய்
நின்னுதர பந்தி பூக்கும்
நின்மலி! அகிலங்களுக் (கு) அன்னை என்றோதும்
நீலிமயன் (று) ஒது வாரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடாத நான்மறையின் வேள்வியால் ஓங்குபுகழ்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே!

பல்குஞ் சரந்தொட் டெறும்புகடை யானதொரு
பல்லுயிர்க் குங்கல் லிடைப்
பட்டதே ரைக்கும்அன் றுற்பவித் திடுகருப்
பையுறு சீவ னுக்கும்

மல்குஞ் சராசரப் பொருளுக்கும் இமையாத
வானவர் குழாத்தி னுக்கும்
மற்றுமொரு மூவர்க்கு மியாவர்க்கும் அவரவர்
மனச்சலிப் பில்லா மலே

நல்குந் தொழிற்பெருமை உண்டா யிருந்துமிகு
நவநிதி உனக்கி ருந்தும்
நானொருவன் வறுமையிற் சிறியானா னால்அந்
நகைப்புனக்கேஅல்ல வோ?

அல்கலந் தும்பர்நா டளவெடுக் குஞ்சோலை
ஆதிகட வூரின் வாழிவே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ காமாட்சி அன்னை துதி

## காப்பு

மங்களஞ்சேர் கச்சிநகர் மன்னுகா மாட்சிமிசைத்
துங்கமுள நற்பதிகஞ் சொல்லவே - திங்கட்
புயமருவும் பணியணியும் பரமனுளந் தனின்மகிழுங்
கயமுகனைங் கரனிருதாள் காப்பு.

சுந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி
சோதியா நின்ற வுமையே
சுக்கிர வாரத்திலுனைக் கண்டு தரிசித்தவர்கள்
துன்பத்தை நீக்கி விடுவாய்
சிந்தைதனி லுன்பாதந் தன்னையே தொழுமவர்கள்
துயரத்தை மாற்றி விடுவாய்
ஜெகமெலா முண்மாய்கை புகழ்வென்னலாமோ
சிறியனால் முடிந்திராது
சொந்தவுன் மைந்தனா யெந்தனை யிரட்சிக்கச்
சிறிய கடனுன்னதம்மா
சிவசிவ மகேஸ்வரி பரமனிட யீஸ்வரி
சிரோன்மணி மனோன் மணியுந்
அந்தரி துரந்தரி நிரந்தரி பரம்பரி
யனாத ரட்சகியும் நீயே
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அன்னை காமாட்சி யுமையே. 1

பத்துவிரல் மோதிரம் எத்தனை பிரகாசமது
பாடகந் தண்டை கொலுசும்.
பச்சை வைடுரிய மிச்சையால் இழைத்திட்ட
பாதச் சிலம்பி னொலியும்.
முத்துமூக் குத்தியும் ரத்தினப் பதக்கமும்
மோகன மாலை யழகும்
முழுதும் வைடூரியம் புஷ்பரா கத்தினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்திட்ட தாலியழகும்.
சுத்தமா யிருக்கின்ற காதினிற் கம்மலுஞ்
செங்கையில் பொன்கங்கணம்.
ஜெகமெலாம் விலைபெற்ற முகமெலா மொளியுற்ற
சிறுகாது கொப்பி னழகும்.
அத்திவரதன் தங்கை சத்தி சிவரூபத்தை
யடியனாற் சொல்லத் திறமோ.
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 2

கெதியாக வுந்தனைக் கொண்டாடி நினதுமுன்
குறைகளைச் சொல்லி நின்றும்
கொடுமையா யென்மீதில் வறமையை வைத்துநீ
குழப்பமா யிருப்ப தேனோ
விதியீது. நைந்துநான் அறியாம லுந்தனைச்
சதமாக நம்பி னேனே
சற்றாகிலும் மனது வைத்தென்னை ரட்சிக்க
சாதக முனக் கிலையோ
மதிபோல யொளியுற்ற புகழ்நெடுங் கரமுடைய
மதகஜனை யீன்ற தாயே
மாயனிட தங்கையே பரமனது மங்கையே
மயானத்தில் நின்ற வுமையே
அதிகாரி யென்றுதா னாசையாய் நம்பினேன்
அன்பு வைத்தென்னை யாள்வாய்.
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி உமையே. 3

பூமியிற் பிள்ளையார் பிறந்தும் வளர்ந்தும்நான்
பேரான ஸ்தலமு மறியேன்
பெரியோர்கள் தரிசன மொருநாளம் கண்டுநான்
போற்றிக் கொண்டாடி யறியேன்.
வாமியென் றுன்னைச் சிவகாமி யென்றேசொல்லி.
வாயினாற் பாடியறியேன்
மாதா பிதாவினது பாதத்தை நானுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கியொரு நாளுமறியேன்.
சாமியென்றே யெண்ணிச் சதுருடன் கைகூப்பிச்
சரணங்கள் செய்து மறியேன்
சற்குருவின் பாதார வீந்தங்களைக் கண்டு
சாஷ்டாங்க தெண்ட னறியேன்
ஆமிந்த பூமியிலடியானைப் போல்மூடன்
ஆச்சிநீ கண்ட துண்டோ
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 4

பெற்றதா யென்றுன்னை மெத்தவும் நம்பிநான்
பிரியமா யிருந்த னம்மா
மெத்தனம் உடையையென் றறியாதுநானுன்
புருஷனை மறந்தனம்மா
பத்தனாயிருந்துமுன் சித்த மிரங்காமல்
பராமுகம் பார்த்திருந்தால்
பாலன் யானெப்படி வீசனமில் லாமலே
பாங்குட னிருப்பதம்மா.
இத்தனை மோசங்களாகாது ஆகாது
இது தர்மமல்ல வம்மா
எந்தனை ரஷிக்க சிந்தனைக ளில்லையோ
யிதுநீதி யல்ல வம்மா.
அத்தி முகனாசையாலிப் புத்திரனை மறந்தையோ
அதை யெனக்கருள் புரிகுவாய்
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 5

மாயவன் தங்கை நீ மரகத வல்லிநீ
மணி மந்தர காரிநீயே
மாயசொ ரூபிநீ மகேஸ்வரியு மானநீ
மலையரை யன்மக ளானநீ
தாயே மீனாட்சிநீ சற்குண வல்லிநீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாநிதி விசா லாட்சிநீ
தாரணியில் பெயர் பெற்ற பெரிய நாயகியும் நீ
சரவணனை யீன்ற வளும்நீ
பேய்களுடனாடிநீ அத்தனிடபாகமதில்
பேர்பெற வளர்ந்த வளும்நீ
பிரணவ சொருபிநீ பிரசன்ன வல்லிநீ
பிரியவுண் ணாமுலையுநீ
ஆயிமகமாயுநீ ஆனந்தவல்லிநீ
அகிலாண்ட வல்லி நீயே
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சியுமையே. 6

பொல்லாத பிள்ளையாய் இருந்தாலும் பெற்றதாய்
புத்திகளைச் சொல்ல வில்லையோ.
பேய்ப்பிள்ளை யானாலும் தான்பெற்ற பிள்ளையை
பிரியமாய் வளர்க்க வில்லையோ
கல்லாகிலும் மூச்சு நில்லாமல் வாய் விட்டுக்
கதறி நானழுத குரலில்
கடுகதனிலெட்டிலொரு கூறுமதி லாகிலுன்
காதினுள் நுழைந்த தில்லையோ
இல்லாத வன்மங்க ளென்மீதி லேனம்மா
இனி விடுவதில்லை சும்மா.
இருவரும் மடிபிடித்துத் தெருதனில் வீழ்த்துவதும்
இதுதரும மல்ல வம்மா
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 7

முன்னையோ சென்மாந்திர மென்மென்ன பாவங்கள்
மூடனான் செய்த னம்மா
மெய்யென்று பொய்சொல்லி கைதனிற் பொருள்தட்டு
மோசங்கள் பண்ணி னேனோ
என்னமோ தெரியாது இக்கணந் தன்னிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டு வந்த தம்மா
ஏழைநான் செய்தபிழை தாம்பொறுத்தருள் தந்து
என்கவலை தீரு மம்மா
சின்னங்களாகுது ஜெயமில்லையோ தாயே
சிறுநாண மாகு தம்மா
சிந்தனைக ளென்மீதில் வைத்து நற்பாக்கியமருள்
சிவசக்தி காமாட்சி நீ
அன்னவாகனமேறி யானந்தமாக வுன்
அடியன் முன் வந்து நிற்பாய்
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 8

என்தனைப் போலவே செனன மெடுத்தோர்க
ளின்பமாய் வாழ்ந் திருக்க.
யான் செய்த பாவமோ யித்தனை வறுமையிலுன்
னடியேன் தவிப்பதம்மா
உன்னையே துணையென் றுறுதியாய் நம்பினேன்
உன் பாதஞ் சாட்சியாக
உன்னையன்றி வேறு துணை யினியாரை யுங்காணேன்
உலகந்தனி லெந்தனுக்கு
பின்னை யென்றெண்ணி நீ சொல்லாம லென்வறுமை
போக்கடித் தென்னை ரட்சி
பூலோக மெச்சவே பாலன் மார்க்கண்டன்போல்
பிரியமாய்க் காத்திடம்மா
அன்னையே யின்னமுன்ன டியேனை ரட்சிக்க
அட்டி செய்யா தேயம்மா.
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 9

பாரதனி லுள்ளளவும் பாக்கியத்தோ டென்னைப்
பாங்குட னிரட்சிக்கவும்.
பக்தியாய் என்பாதம் நித்தந் தரிசித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலருக் கருள் புரியவும்
சீர்பெற்ற தேசத்தில் சிறுபிணிகள் வாராமல்
செங்கலிய னணு காமலும்.
சேயனிட பாக்கியஞ் செல்வங்களைத் தந்து
ஜெயம் பெற்று வாழ்ந்து வரவும்.
சேர்பெற்ற காலனைப் பின்றொடர வொட்டாமற்
பிரியமாய்க் காத்திடம்மா
பிரியமாயுன்மீதில் சிறியனான் சொன்னகவி
பிழைகளைப் பொறுத்துரட்சி
ஆறுதனில் மணல் குவித் தரிய பூசை செய்வவென்
னம்மை யே காம்பரி நீயே
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சியுமையே. 10

எத்தனை ஜெனனம் எடுத்தேனோ தெரியாது
இப்பூமி தன்னிலம்மா.
இனியாகிலும் கிருபை வைத்தென்னை ரட்சியும்
இனிஜெனன மெடுத் திடாமல்
முத்திதர வேணுமென்று உன்னையே தொழுதுநான்
முக்காலும் நம்பி னேனே.
முன்பின்னுந் தோணாத மனிதரைப் போலநீ
முழிந்திருக் காதே யம்மா.
வெற்றி பெற வுண்மீதில் பக்தியாய் நான் சொன்ன
விருத்தங்கள் பதினொன்றையும்
விருப்பமாய்க் கேட்டுநீ யளித்திடுஞ் செல்வத்தை
விமலனா ரேசப்போறார்.
அத்தனிட பாகமதை விட்டு வந்தேயென்
அருங்குறை யைத் தீருமம்மா
அழகான காஞ்சி யில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே.

முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதா லன்னை பெறமுயி ரனைத்தும்
பேணலா லன்னை பெற்றிடுவோர்
உற்றதா லன்னை விரும்பிய அனைத்தும்
உதவலா லன்னை எக்கலையும்
செற்றதா லன்னை உலகொடு வானுந்
தொழுதலா லன்னை என்னெற்றும்
பற்றதாங் கருணை பொழிதலா லன்னை
பராபரை நாக பூடணியால்

- நயினை நாகமணிப்புலவர்.

# வரலாறு
# முருகன் எட்டுக்குடி ஏசல்

முருகப் பெருமான் ஸ்ரீ வள்ளி நாயகியைத் திருமணம் செய்து விட்டார் என்ற செய்தியறிந்த தெய்வானையம்மன் ஊடல் கொண்டு கதவைத் தாள்ப்பாள் இட்டு அடைத்து விடுகின்றார். ஸ்ரீ வள்ளி நாயகி சமேதராக எழுந்தருளிய முருகப் பெருமான் கதவைத் திறக்குமாறு பல்வேறு சமாதானம் கூறுவதாகவும் அதற்கு தெய்வயானையம்மன் பதில் கூறுவதாகவும் எட்டுக்குடி ஏசல் அமைகின்றது. இறுதியில் ஊடல் நீங்கிய தெய்வயானையம்மன் கதவைத் திறந்து சமாதானம் அடைகின்றார்.

இவ் எட்டுக்குடி ஏசல் முருகப் பெருமான் திருக்கல்யாணத்தின் போது ஆலயங்களில் படிக்கப்படுகின்றது. நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் முருகன் திருக்கல்யாணத்தின் போது

இவ் ஏட்டுக்குடி ஏசல் பாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனை ஒரு வெளியீடாக வெளியிடுவதன் மூலம் முருகன் அடியார்கள் இதனை அறிந்து நித வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஓசை நயனம் சந்தம் படிப்போர் மனதைத் கொள்ளை கொள்ளும் தன்மையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன்
# எட்டுக்குடி ஏசல்

மாசில் முருகேசருக்கும் மாது தெய்வானைக்கும்
ஏச நேரிட்டதை யான் இயம்பவே காசினியில்
செஞ்சடிலம் நின்ற எழில் தேர் கயமாமுகத்தோன்
கஞ்ச மலர்த் தாளிணையே காப்பு.

காசினியோர் புகழும் எட்டுக்குடி வேலவா
கதவைத் திறக்கும் ஏசல் பாட எழில்
கதவைத் திறக்கும் ஏசல் பாட மூஷிகவாகனம்
மீதேறும் விநாயகன் முளரி மலரடியே
காப்பு முளரி மலரடியே காப்பு.

செய்ய வடிவேலேந்தும் முருகர் வருகின்ற செய்தி அறிந்தாள் அம்மாது தெய்வயானை அறிந்தாள் அப்போது பரிவுடன் வடிவேலர் முருகர் வாரார் என்று படக்கென்று அடைத்தாள் அடைத்த கதவும் தெரியாமலே முருகேசர் ஆசையில் மதிமயங்கியே அவள் விரைவினிலே வந்து தட்டினார் தானே கதவைத் தட்டினார் கையினால் தானே.

தெய். செண்பகவதியடி கதவைத் தட்டி தட்டி திறவென்று சொன்னவர் யாரோ தெரிவினில் வந்தவர் யாரோ.

முருகர். எந்தன் கண்மணியே அறியாயோ வந்தவன் எட்டுக்குடி வேலவன் நானே பெண்ணே எட்டுக்குடி வேலவன் நானே.

தெய். எட்டுக்குடியைவிட்டு விரைவினில் இரவில் எப்படி வந்தீர் சொல்லும் சுவாமி நீரும் எப்படி வந்தீர் சொல்லும் சுவாமி.

முருகர். மாது நின்முகமதி ஒளியைக்கொண்டு வந்தேன் மாதரசே இந்த வேளை எழில் மாதரசே இந்தவேளை.

தெய். இந்தவேளை இரு காதவழி தூரம் எவ்விதம் நடந்துவந்தீரோ சுவாமி எவ்விதம் நடந்து வந்தீரோ.

முருகர். கட்டழகி உன்னை மனத்தில் நினைத்தபோது காதவழியும் அரை நாழியே இருகாதவழியும் அரைநாழியே.

தெய். அரைநாழி உமைவிட்டுப் பிரியாளே அந்த வள்ளி அறியாமல் ஓடி வந்தீரோ அவளுக்குத் தெரியாமல் ஓடி வந்தீரோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகர். அந்த வள்ளியை விட்டு உந்தன் முகத்தைக்கான ஆசை கொண்டு வந்தோர் பெண்ணே ஆசை கொண்டு வந்தேனே.

தெய். காண வந்ததில் என்ன ஆயிரமாகவே கைப்பொருள் கொண்டு வந்தீரோ சுவாமி கைப்பொருள் கொண்டு வந்தீரோ.

முருகர். வேணுமென்றதை எல்லாம் நான் இங்கே தருகின்றேன் விரைவுடனே சொல்லுவாயே பெண்ணே விரைவுடனே சொல்லுவாயே.

தெய். சொல்லுவதும் இல்லை உமது பொருளும் வேண்டாம் தூரத்தில் போம் நேயாள் வீடே சுவாமி தூரத்தில் போம் நேயாள் வீடே.

முருகர். நேசமில்லாமவள் போலும் நீ பேசுகின்றாய் நித்திரை மயக்கமோ பெண்ணே உனக்கு நித்திரை மயக்கமோ கண்ணே.

தெய். நித்திரை விட்டுமே நீர் வருவீரென்று நினைத்திருப்பாளே வள்ளி போம் போம் சுவாமி நினைத்திருப்பாளே வள்ளி போம் போம்

முருகர். போம் என்று நீ சொல்ல ஞாயமல்லவே நான் போனால் என்ன கெட்டுப்போகும் பெண்ணே போனால் என்ன கெட்டுப் போகும்.

தெய். கெட்டுப்போகதந்த கஷ்டங்கள் எல்லாம் கேட்டவர் யார் சொல்லு சுவாமி இந்த கேட்டவர் யார் சொல்லு சுவாமி.

முருகர். கேட்கச்சொல்லி உன்னையாரடி இப்போ கேவலம் என்னை இகழாதே பெண்ணே கேவலம் என்னை இகழாதே.

தெய். இகழவும் பேசவும் என்னால் ஆகாதந்த இனியவள்ளிக்கே ஒக்கும் தானே சுவாமி இனிய வள்ளிக்கே ஒக்கும் தானே.

முருகர். ஒக்க என்னையணைத்தால் உன்னை இனிப்பிரியானே உறுதி சொன்னேன் மண்டலமறிய பெண்ணே உறுதி சொன்னேன் மண்டலமறிய.

தெய். மண்டலம் புகழ்வடிவேலேந்தும் முருகரே வார்த்தை பழக்க வந்தீரோ போம் போம் வார்த்தை பழக்க வந்தீரோ.

முருகர். வார்த்தை பழக்கிட வல்லவன் அல்ல என்மனதிற் கோபம் செய்யாதே பெண்ணே மனத்திற் கோபம் செய்யாதே.

தெய். போதும் போதும் இந்த உபசாரவார்த்தை போதிக்க வந்தீரோ சுவாமி நீரும் போதிக்க வந்தீரோ சுவாமி.

முருகர். கன்னியுன் மனமிரங்காததென்ன இருகாலும் நோகுதடி கண்ணே எந்தன் காலும் நோகுதடி பெண்ணே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய். முள்ளுமிதியடி முனைமேல் நிற்பார்க்க முந்திக்கால் வலிக்குமோ சுவாமி அவர் தந்திர வித்தைதான் சுவாமி

முருகர். நல்ல மயில் குயிலே எந்தன் அன்னமே வந்து கதவைத்திறப்பாயே பெண்ணே நொந்து மனம் திறக்காதே.

தெய். கதவைத்திறவெனப்பதனமாய் பேசுறீர் கைப்பொருள் கொண்டு வந்தீரோ சுவாமி செப்படி வித்தைகள் தானே.

முருகர். குன்றக்குடியினில் அன்று காணிக்கை வைத்த கொலுசுகள் இருக்குது தாறேன் பெண்ணே கொலுசுகள் இருக்குதுதாறேன்.

தெய். பஞ்சனை வள்ளியைக் கொஞ்சி இருந்தவர் பாதத்தில் இட்டு நீர்பாரும் நல்ல சோதிப்பரபையதாகும்.

முருகர். தைப்பூச நாளினிற் காணிக்கையாய் தந்து தண்டைகள் இருக்குது தாறேன் பெண்ணே கொண்டுகளிப்பது கூறே.

தெய். வைப்பாட்டி வள்ளியின் கூட்டுக்குச் சென்றீரே வைத்தவள் காலுக்கு பாரும் அவள் சித்தம் களித்திடச் சேரும்.

முருகர். சித்திரா ரணை சேர்த்து வைத்திருக்கிற செவ்வந்திமாலைகள் தாறேன் பெண்ணே சினத்தைத்தணித்து நீ சேரே.

தெய். தேவா தேவா இந்தபூருவ நகைகளைத் திருடி எடுத்து வந்தீரோ என்னை கருதி எடுத்து வந்தீரோ.

முருகா. இந்திரலோகத்து வெள்ளையானை வந்திருக்குது இதனை கண்ணால் உற்றுப்பராய் எந்தன் மனதுப்புண்ணை சற்றுத்தீராய்.

தெய். கண்ணால் பார்பதென் பெண்ணாய் வளர்த்தென்ன காத்து கொடுக்கும் கையில் நல்ல கூடத்திற்குப்போகவோ சுவாமி.

முருகர். இந்தக்கதவினைத் திறக்கவே மந்திரம் இருக்கிறது என்னிடம் பாராய் பெண்ணே சிரித்திடக் காட்டிறேன் சீராய்.

தெய். தட்டிக் கதவைத் திறந்திட நான் உம்மைத்தழுவி அணைத்திடுவேன் சுவாமி உன்னைத் தழுவி அனைத்தி டுவேன் சுவாமி.

முருகர். சிந்தையிற் பஞ்சாட்சரம் தன்னை நினைத்தவுடன் திறந்தது அக்கதவு தானே அப்போ திறந்தது அக்கதவு தானே.

திறந்திடும் பொழுதினில் பூமழை பொழிந்து தெய்வயானையும் சேர்ந்தனனே பூமி உய்வது சத்தியம் தானே.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிலா வாம்பல கோடி
இயங்குவன புவனங்கள்
மன்னுயிர்கள் அனைத்தையும்
மாதா நீ பயந்தனையோ
தண்ணளியால் துயர் போக்கி
இன்பங்கள் தந்தனையே
கண்மணி நின் கருணையெனும்
இரு கடலும் கரையுனதே

**வேறு**

ஐந்தெழுத்துடன் ஆறெழுத்து உத்தியே தட்டிட
ஆவென்று திறந்தது நாளும் மெல்ல ஓமென்று
வந்தது யாரும் திறந்திடு பொழுதினிற் பூமாலை
பொழிந்திட தெய்வயானையும் சேர்ந்தாளே பூமி
உய்வது சத்தியம் தானே.

முற்றும்

## பட்டினத்தார் பாடல்

கட்டியணைந்திடும் பெண்டிரும் மக்களும் காலத்தச்சன்
வெட்டிமுறிக்கும் மரம்போற் வீழ்த்திவிட்டால்
கொட்டிமுழக்கி யழுவார் மயானங் குறுகியப்பால்
எட்டியடிவைப்ப ரோவீறை வாகச்சி யேகம்பனே.

பிறக்கும்பொழுது கொண்டுவந்த தில்லைப் பிறந்துமண்மேல்
இறக்கும்பொழுது கொண்டுபோவ தில்லை யிடைநடுவில்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்தந்ததென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லு வேன் கச்சியேகம்பனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருஞ்சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளும்
சீருஞ்சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே.
யாருஞ்சதமல்ல நின்தாள் சதங்கச்சி யேகம்பனே.

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில்ஒரு
பிடிசாம்பராய் வெந்துமண் ணாவதுங்கண்டு பின்னமிந்தப்
படிசார்ந்த வாழ்வைநினைப்பதல் லால்பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாம்உய்ய வேண்டுமென் றேயறிவாரில்லையே.

ஊட்டுவிப்பானு முயங்குவிப்பானுமிங் கொன்றொடொன்ற
முட்டுவிப்பானு முயங்குவிப்பானுமிங் கொன்றொடென்ற
காட்டுவிப்பானு மிருவினைப் பாசக் கயிற்றின்வழி
ஆட்டுவிப்பானு மொருவனுண் டேதில்லை யம்பலத்தே

பிறவாதிருக்க வரந்தர வேண்டும் பிறந்து விட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
அறமார் புகழ்ந்தில்லை யம்பலவாண ரடிக்கமலம்
மறவாதிரு மனமே யதுகாண்தன் மருந்துனக்கே.

ஐயிரண்டுதிங்களாய் அங்கமெல்லாம் நொந்துபெற்றுப்
பையல்என்ற போதே பரிந்துஎடுத்துச் - செய்யஇரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலைதந்தாளை
எப்பிறப்பில் .காண்பேன் இனி

முந்தித்தவம்கிடந்து முந்நூறுநாள் சுமந்தே
அந்திபகலாச்சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச்சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலும் வைத்துஎன்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன்.

அரிசியோ நான்இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசை இட்டுப் பார்த்து மகிழாமல் - உருசிஉள்ள
தேனே அமிர்தமே செல்வத்திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு.

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பானோ கூசாமல் - மெள்ள
முகுமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்தவாய்க்கு.

## ஸ்ரீ கருமாரியம்மன் ஸ்தோத்திரம்

கற்பூர நாயகியே கனகவல்லி
காளி மகமாயி கருமாரியம்மா
பொற்கோயில் கொண்டசிவ காமியம்மா
பூவிருந்த வல்லிதெய்வ யானையம்மா
விற்கோல வேதவல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
பொற்கோயில் தானமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழவிப்பாய் என்னைநீயே (கற்பூர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனமுழு தாளுகின்ற புவனேஸ்வரி
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமைச் சிறியேனை நீயாதரி (கற்பூர)

உன்னிடத்தில் சொல்லாமல் வேறுஎந்த
உறைவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ - அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவா அம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவனின் குரல்கேட்டுன் முகம் திருப்பு
சிரித்தபடி என்னைத் தினம் வழியனுப்பு (கற்பூர)

கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்
காலிரண்டும் உன்னையே நாடவேண்டும்
பண்ணமைக்கும் நாஉனையே பாடவேண்டும்
பக்தியோடு கையுனையே கூடவேண்டும்
எண்ணமெல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடைய தாக வேண்டும்
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா
மகனுடைய குறைகளைநீ தீருமம்மா. (கற்பூர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினாதீவு

# நாகேஸ்வரியம்மை பதிகம்

முத்துக்குமாருப் புலவர்

சந்திரபூ ரணரத்ன தங்கோ டக்கிரீட
தண்ணின்ற தவழ வட்டத்
தனபதியை நிகர்மன்ன ரடிதொழச்சதுரங்க
தாளைவெள் ளங்கள் சூழச்
சிந்துரப் பகைமைபிடர் பீடிகையிருந் தெண்டி
சாமுகமு மேயி றைஞ்சத்
தேவேந்திர சுகுமுற் றிருப்பவர்களுன்பாத
சேவைபுரி பவர்களன்றோ
மந்திர காரண ரூபரூ பாதசிவ
மகமாயி புவன நேசி
வாலசுந்தரி கௌரி நயினைமா நகர்க்கண்
வைகியருள் செய்யு மொருதாய்
நந்துறு கரன்பிரம னங்கமணி கங்களொடு
நஞ்சணி பிறங்கு களமே
நகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

சோடுற்ற நவரத்ன கும்பியும் மேலிட்ட
தொங்கலும் அகில ளாவிச்
சொருகிட்ட கொண்டையுஞ் சுட்டியும் மலர்க்கையாயில்
தொட்டிட்ட சிந்தூ ரமும்
தோடுற்ற கொந்தழகு மரகதக் கொப்புமார்
துணைவிழியி லெழுது மையும்
துகளற்ற வெண்டரள முருகுநற் பவளவாய்த்
துவருமொளிர் நளின முகமும்
தேடுற்ற செங்கமல பொற்பதமு மழகான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவு மறிவினாலே
தெரிசிக்க வருடந்து நீடாயுளும் பெருஞ்
செல்வ முந்தர வேண்டுநீ
நாடுற்ற பலவளமு முறையுமெழில் நயினா
நகர்க்கண் மருவுங் கௌரியே
நாகமணி யும்பர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

ஆரணத் துபநிடத வக்கரத் தொனியாகி
யாகாய வட்ட மாகி
அறுகோண மிருகோண முக்கோண நாற்கோண
மாகிநிற மைந்து மாகி
காரணத் துருவாகி யருவாகி யாவுமாய்க்
காக்குமுன் பெருமை யெளிதோ
கருணைப்பிர வாகமா மானந்த வெள்ளங்
கசிந்தூா றுபே ராழியே
ஏரணைத் திடுமருத வேலிசூழ் நயினா
வெனும்பதி சிறந்து மேவும்
யாமள சௌந்தரீ கோமள சொரூபியே
ராசபர மேசு வரியே
நராணற்கொரு சகோதரியென்ன வந்தருளும்
நாகபூசணி நாரணி
நாகமணி யும்பரமா் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி அம்மையே.

சத்திபை ரவிகௌரி அக்கணியு முக்கணி
சடாதரி சடாட்ச ரத்தி
சங்கரி சுமங்கலி மதங்கியரு ளம்பிகை
சவுந்தரி சண்ட சண்டி
உத்தமி பராபரை மனோன்மணி சிவானந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுமையிமைய முதவு மங்கை
உலகுதவு மன்னையா மளை பொன்னினம்பலவ
ருடனிட மகிழ்ந்து மேவும்
நித்தியகல் யாணிசம் பவிபுவன கௌமாரி
நிமலமக மாயி யென்றே
நெஞ்சில்நித முந்நினைவு தந்துனை வணங்கவரு
நின்னடியவர்க் கருளுவாய்
நத்துலவு சுத்தமணி யெய்துநயி னாநகரில்
நாளுமுறை யாழின் மொழியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி அம்மையே.

ஆகமது கூனித் தளர்ந்துரோ மம்வெளுத்
தைம்புல னொடுங்கி மேலாம்
அறவழிந் தைமே லெழுந்ததீ தத்தினுயி
ரணுகுமக் காலை தனிலே
வேகவெங்கட மையிடர் நெளியவரு ஏமெனற்கு
விடுகயிறு முடுகி யடுமுன்
வினையேனை யஞ்சலென் றுனதுநா யகருடன்
வெள்ளை விடைமீ தேறியே
பாகமுற வந்துநின் றடிமைகொண் டெனையும்நீ
பாதுகாத் தருள வேண்டும்
பைங்குலைத் தெங்கிளஞ் சோலைசெறி நயினைநகர்
பண்பு கொண்டுறை செல்வியே
நாகமடர் தாருவென மேவிமுனி வோர்களுறை
நாடிவரு கோப விடமார்
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றிற் சிறந்தபொற் குவையென்ன வளர்சாலி
வயலிற் கிடந்த நத்தம்
மடையிற் றவழ்ந்தேறி மனையிற் புகுந்துழவர்
மனைமுன்றி லீனு முத்தை
ஆற்றிற் சிறந்திடத் தண்டுலங் களையுநீர்
அள்ளிப் புறத்தின் மேவி
அருகுற்ற சோலையினு மிகுதுற்ற வாவியினு
மரவிந்த வோடைக ளினும்
காற்றிற் சிறந்துலவு கால்கொண் டுலாவக்
கயற்கண்ணி வந்து மோதக்
கமுகினிற் றெங்கினிற் கதலியில் வருக்கையிற்
களியு மடலுஞ் சிதறியே
நாற்றிற்கு மேகமழு மதுமாரி சொரிநயி
னாநகரி னண்ணு முமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

வன்கய மருப்பென நிமிர்ந்தபடி பருத்திறுகி
மணிவா ரறுத்து விம்மி
வட்டமிட் டெழுகும்ப முலைமுகங் காட்டியிரு
மகர விழிவலை வீசியே
மின்கய மதனசாலுள் விட்டடைத் துளபெரு
வெறுக்கையைப் பற்றி யேற்கும்
வேசியர் தனக்கடிமை செய்விக்கு மென்னைமுன்
வினைநூறியருளு தவுவாய்
பொங்கிடு நெடுந்திரைப் புணரிநாற் றிசையும்
பொருந்தநடு மேவி யுலகிற்
புகழ் பெருகு நயினைமா நகரினி லிருந்துமிகு
புதுமைதரு புனித தாயே
நன்கிய விளம்பிறையொ டொன்றைவேண் டிச்சடில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பு கொண்டிடு நஞ்சுமார்
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

சம்புசிவ சங்கர திகம்பர நடம்புரி
சமர்த்தாதி யாதி யாய
தற்பர மதிச்சடில முக்குண சதுர்ப்புய
சதாசிவ சிவாசி வாய
எம்பரம வென்றுபதி னெண்கணமு மிம்பரு
மிறைஞ்சிவரு கணவ ருடனே
இங்கித முடன்கயிலை தங்கியுறை யம்பிகையி
னின்புக ழியம்ப வெளிதோ
அம்புயமடந்தைய ரரம்பையர் வயர்தளவு
மரியநவ சக்தி களெலா
மன்பினொடு தொண்டுசெயு முந்தனர வீந்தபத
மந்தநிழல் தந்த ருளுவாய்
நம்பிவரு தொண்டர்பெற மங்கல மிகுந்தநயி
னாநகரி னன்னு முமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

கந்தான சொசியச் சினக்கும் கடாதடக்
கைமலை முகத்த வுனைக்
கால்கொண் டுதைத்துவன் றோலுரித் துப்போர்த்த
காத லனைமன் றாடியே
முந்தாத ரத்தினொடு மிருநாழி நெற்பெற்று
முடிவிலா துயிர்க ளுய்ய
முப்பத் திரண்டறந் தன்னையுத வியவன்னை
மூவுலகு நீயா கையால்
சிந்தா குலங்கொண்டு திரியநான் முறையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினந்தி னம்சொல வேண்டுமோ
திருவுள மிரங்கியே சற்றுன் கடைக்கண்
திருப்பி னால்வெகு பாரமோ
நந்தாத வரமுதவு நங்கையே நயினா
நகர்க்கண் மருவும் கௌரியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

சீர்தங்கு தன்சுனை யென்சேர் மனத்திற்
றிழைத்துக் குழைந் தரும்பும்
செஞ்சரண கஞ்சமலர் தஞ்சமெனு மென்புன்
சிரக்கஞ்ச மீதில் வைத்தே
ஏர்தங்கு நல்லருட் பேறுதவி நெஞ்சத்
திடுக்கண் தவிர்த்து அஞ்சேல்
என்றுமுன் நின்றெமக் கீடேற்ற முதவுவார்
யாருன்னை யின்றி யம்மா
பேர்தங்கு மகிலாண்ட டுக்குமதி லூறுபொருட்
பிரிவுஞ் சராச ரமெனும்
பேருயிர்க ளுந்தந்து பாதுகாத் தருளுமுன்
பெருமையாம் பாட வெளிதோ
நார்தங்கு சற்குணத் தொண்டருய வென்றுநயி
னாகரி னண்ணு முமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும்
யாழ்ப்பாணத்தை
வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி குமாரவேலு மகேஸ்வரி

## அவர்களின்

**இதய நினைவுகளை**
**இசைத்துப் பார்க்கின்றோம் ...**

**பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும்**
**பேணலாலன்னை பெற்றிடுவோர்**
**உற்றதா லன்னை விரும்பிய அனைத்தும்**
**உதவலாலன்னை எக்கலையும்**
**செற்றதாலன்னை உலகொடு வானுந்**
**தொழுதலாலன்னை என்றென்றும்**
**பற்றதாங் கருணை பொழிதலாலன்னை**
**பராபரை நாக பூடணியால்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்திலுள்ள அருட்தலங்களில் கடல் கடந்து செல்லும் யாத்திரைத்தலம் நயினாதீவு தினமும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் அலைமோதும் அருட்தலம் இத்தனைக்கும் புகழ் பெற்றவள் வழாது இங்கு அமர்ந்து அருளாட்சி புரியும் அன்னை நாகபூஷணி.

இத்தலத்தின் ஆதி ஆதீனகர்த்தா உயர்திரு கதிரித்தம்பி இராமச்சந்திரர் ஆவார். இவ்வாலய ஆதீனகர்த்தா மரபில் ஆதீன கர்த்தாவாக விளங்கிய உயர்திரு பரமலிங்கம் கந்தசாமிக்கும் நயினாதீவின் வரகவி நாகமணிப்புலவரின் சிரேஷ்ட மகளார் நாகரெத்தினம் தம்பதியினருக்குத் தலைமகளாகப் பிறந்தவர் எமது அன்னை

குடும்பத்தின் தலைமகளானதால் குடும்பப் பொறுப்புக்களை ஏற்று தன் சகோதர, சகோதரிகளை மிகவும் வாஞ்சையுடன் வளர்த்தெடுத்தார் தாய்க்குத் தாயாகி தன் தம்பிமார்க்கும் தங்கைக்கும் தாயாராகினார். நயினாதீவின் தலைமைக்காரராக விளங்கிய உடையாரும் நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் ஆதீன கர்த்தாக்களில் ஒருவருமாகிய உயர்திரு இரகுநாதர் சரவணமுத்து முத்துப்பிள்ளை தம்பதியினரின் குமாரன் வைத்திய கலாநிதி சரவணமுத்து குமரவேலு அவர்களை வாழ்க்கைத் துணையாக ஏற்று இல்லறம் என்னும் நல்லறத்தை கருத்தொருமித்து வாழ்ந்து காட்டினார்கள் சிறிது காலம் இலங்கையில் மத்திய மலைநாட்டின் மாத்தளைப் பகுதியில் கணவரின் தொழில் நிமித்தம் வாழ்ந்தார்கள். அங்கு வைத்தியராகவும் ஆசிரியராகவும் எமது தந்தையார் கடமையாற்றினார்கள். 1958இல் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரங்களால் மீண்டும் தன் சொந்த இடமாகிய நயினாதீவிற்கே திரும்பி வந்தார்கள் நயினாதீவின் பிறப்பு இறப்புப் பதிவாளராகவும் கடமையாற்றினார்கள். சிவபூசை செய்து நித்திய கருமங்களை ஆற்றும் நியமங்களை தந்தையார் தவறாது செய்ய எமது தாயார் உதவினார்கள். ஆலயங்களில் நிஷ்டை கூடியிருந்து மனதை ஒரு ஒரு நிலைப்படுத்தும் தியானத்தில் எம் தந்தையார் ஈடுபடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறத்தின் நன்கலமாகிய நன்மக்கட் பேறாக சிவானந்தன் (பொறியியலாளர் - ஓமான்) சச்சிதானந்தன் (முன்னாள் உதவி முகாமையாளர் இலங்கை வங்கி - லண்டன்) வைத்திய கலாநிதி குகனானந்தன் ((R.M.O பதுளை) சரவணபவானந்தன் (உதவிக் கல்விப் பணிப்பாளர) சிவபாதம் (முன்னாள் விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் - லண்டன்) இராஜேஸ்வரன் - AACE கனடா) கைலாயநாதன் (பிரான்ஸ்) வைத்திய கலாநிதி குமாரசூரியர் (M.D அமெரிக்கா) ஞானபூரணி (போதனாசிரியர் முறைசாரக் கல்வி) கேதாரபூரணி (ஆசிரியை) ஆகியோரைப் பெற்று மகிழ்ந்தார்கள் பிள்ளைகளின் கல்வியில் பேரார்வத்துடன் ஈடுபட்டார்கள்.

தந்தையார் அவர்கள் 07.06.1962இல் திடீரென இறைபதம் எய்தியமை எம்மை பேரதிர்ச்சிக் குள்ளக்கியது. இன்றுவரை அவ்வதிர்ச்சியிலிருந்து நாம் விடுபட முடியாதவர்களாகவே உள்ளோம். தாயாரும் இறுதி மூச்சின் போது அப்பா என அழைத்தவாரே சென்றார்கள் தந்தையின் மறைவின் பின்னர் குடும்பத்தின் சகல பொறுப்புக்களையும் ஏற்று தாயாகவும் தந்தையாகவும் இருந்து தன்னை உருக்கி எம்மை வளர்த்தார்கள் எங்கள் உயர்வு கண்டு இன்புற்றார்கள்

மருமக்களாக சறோஜினி, பரிமளா (முன்னாள் சுருக்கெழுத்தாளர் - மாவட்ட நீதிமன்றம்) ஜெயமலர், நாகரெத்தினம் (ஆசிரியை) ரூபராணி, ஜெயகௌரி, நகுலேஸ்வரி, ஸ்ரீதரன் (பொறுப்பதிகாரி லங்கா சீமெந்து நிறுவனம்) ஞானகாந்தன் (அதிபர் யா/இந்து ஆரம்ப பாடசாலை) எலிசபெத் (அமெரிக்கா) ஆகியோரையும் பெற்று மகிழ்ந்தார்கள்.

பேரக் குழந்தைகளாக வித்யசுமங்கலை, நிவேதிகா, நிராகுலன், பவதாரணி, மதுசூதனன், லக்ஷாயினி, நிஷாந்தி, காயத்திரி, அபர்ணா, ஜசித்ரா, ஜனித்ரா, கிரிசாந், சாரித்ரா, சாயித்ரா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவரஞ்சிகா, பரசுதரன், நிருபிகா, சயந்தன், திவாகர், கேஷினி, பிரியந்தினி, மதுரந்தினி, சுகப்பிரதா, சுகவரதா, சிவானுஜன், மகேஷன், ஆனந்த், திவ்யா ஆகியோர்களைக் பெற்று அகமகிழ்ந்தார்கள்.

கணவர் வழி மைத்துணராக காசிலிங்கம் இளைப்பாறிய பிரதம லிகிதர் சின்னம்மா சிவக்கொழுந்து புவனசுந்தரம் (இளைப்பாறிய அதிபர்) செல்லத்துரை (அதிபர்) விசாலாட்சி, தையலம்மை இரகுப்பிள்ளை, வைத்திலிங்கம், இராமலிங்கம், நாகம்மா ஆகியோரையும் அரவணைத்து வாழ்ந்தார்கள்.

உடன் பிறப்புக்களாக கனகசபாபதி (ஆசிரியர்) காலஞ் சென்றவர்களான குகதாசன் (கல்வி அதிகாரி) காமாட்சி சுந்தரம் (அதிபர்) மகாலிங்கம் (பிரதமலிகிதர்) இராசரெத்தினம் (சங்க அதிகாரி) ஞானசுந்தரம் (அதிபர்) மற்றும் பரமலிங்கம் (மேலதிக செயலாளர் இந்து கலாசார அமைச்சு) சௌந்தரம் பராசக்தி, கமலாம்பிகை (ஆசிரியை) லலிதாம்பாள் (ஆசிரியை) மகாதேவா (ஓய்வு பெற்ற தபாலதிபர்) வைத்திய அத்தியட்சகர் நவரெத்தினராசா (தென்னாபிரிக்கா) ஆகியோரைப் பெற்று பெரியக்கா என வாய்நிறைய அழைக்கும் சகோதரர் சகோதரிளுடன் இன்புற்றார்கள்.

தேவார திருவாசகங்களையும் கந்தரநுபூதி, அபிராமி அந்தாதி ஆகிய பாசுரங்களையும் தினமும் ஓதிப் பாராயணம் செய்யும் வழக்கம் உடையவர்.

நெற்றியில் மூன்று குறிகளுடன் திருநீற்றுப் பூச்சும் மத்தியில் வட்ட வடிவில் சந்தணப் பொட்டும், பொக்கை வாய்ச் சிரிப்புடன், மலர்ந்த முகத்துடன், தோய்த்து உலர்ந்த சேலையுமாக எளிமையாகத் தூய்மையுடன் காடசி தரும் உருவம் என்றும் எங்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் எங்கள் அருமை அம்மா நாங்கள் குடியிருந்த கோவிலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு சித்திரைத் தமிழ் புதுவருடப் பிறப்பிற்கும் எங்கள் மாமாமார்களும், சின்னம்மாமார்களும் அம்மாவீடம் வந்து வணங்கி ஆசி பெறுவார்கள். நாங்கள் சிறுபிள்ளைகளாக அம்மாவை வணங்குவது போல் பெரியவர்கள் எல்லோரும் வணங்கும் போது நாங்கள் புதுமையாகப் பார்ப்போம். அப்போது எங்கள் மாமார்கள் கூறுவார்கள் உங்களது ஆச்சி அதாவது எங்கள் அம்மா எங்களைப் பெற்றார்கள். உங்கள் அம்மா எங்களுக்கு அக்கா. சிறுவயது முதல் எங்கள் தாயாகவே இருந்து வளர்த்து எடுத்தவர்கள். எனவே இவர்கள் உங்களுக்கு மட்டும் தாயாரில்லை எங்களுக்கும் தாயாராக இருப்பவர்கள் என்று கூறிக் கண்களில் நீர்மல்கக் கதைப்பார்கள். இவ்வாறு தாய்மை உணர்வைத் தூய்மையாக உடன் பிறப்புகளில் நிலை நிறுத்தி இருப்பவர்கள் எங்கள் அன்னை.

யாழில் இருந்து சித்தப்பாமார்கள், மாமிமார்கள் எங்கள் வீட்டிற்கு வந்தால் அத்தாச்சியின் கையால் சமைக்கும் உணவிற்கு ஒரு தனி உருசி என்று கூறி ஆழமாகக் கோலமிட்டு சாணியால் மெழுகியுள்ள இந்தத் திண்ணையில் தடுக்குப் பாயில் இருந்து வாழை இலையில் சாப்பிடுவதும், தனி உருசியாக உள்ளது என்று ரசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் பக்குவமாய் பரிமாறி இன்னும் சாப்பிடுங்கள் என்று உபசரிப்பதிலும், விருந்தோம்பும் பண்பிலும் சிறந்து விளங்கியவர்கள் எங்கள் அன்னை.

பக்கத்து வீட்டுப் பெத்தாச்சியின் பேரக்குழந்தை கையில் ஒரு பெட்டியுடன் முற்றத்தில் வந்து நின்று காலால் கோடு போட்டுக் கொண்டு நிற்கும். அம்மா அக்குழந்தையைப் பார்த்ததும் தோட்டத்திற்குள் சென்று கத்தரி, வெண்டை, தக்காளி, கீரை, பச்சை மிளகாய் என்பவற்றைப் பறித்துப் போட்டு இரண்டு தேங்காய்களும் வைத்துக் கொடுத்து விடுவார்கள். இவ்வாறு குறிப்பறிந்து அயலவர்களுக்கு உதவுவதில் முன் மாதிரியாகத் திகழ்ந்தவர் எங்கள் அன்னை. இவரை அயலவர்கள் அன்போடு அழைப்பது மகேஸ் அக்கா என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தான் பெற்ற குழந்தைகளுடன் தன் உடன் பிறப்புக்களையும், இனபந்துக்களையும், சுற்றத்தாரையும் தனது ஆசைப் பேரக்குழந்தைகளையும் தமது இறுதி மூச்சு வரை அரவணைத்துக் காத்து எல்லோரும் அன்புடன் வளமும், நலமும் பெற்று வாழவேண்டும் என்று வழிகாட்டி ஒரு சமுதாயத்தில் கூட்டுக் குடும்பத் தலைவியாக வாழ்ந்தவர்கள் எங்கள் அன்னை.

மணித்தீவின் மாதரசி மகேஸ்வரி வெள்ளரிப் பழம் தன் கொடிக் காம்பில் விலகுவது போல் பிரகிருதி தனைப் பிரிந்துசிவம் சார்ந்து மரணத்தை வென்றிடுவேன் கலங்காது சென்று கடமையைச் செய்யுங்கள் ஒற்றுமையாய் சீராக வாழ்ந்திடுங்கள் இன்பமாய் இருங்கள் எல்லோரும் எங்கிருந்தாலும் பாசப் பிணைப்புடன் வாழுங்கள் என்று உணர வைத்தீர் உம் அன்புக் கரங்கள் அள்ளிச் சொரிந்த அன்பு மொழிகளால் அது உணர்ந்து விடைபெற்று வந்தனர் பிள்ளைகளும் மன நிறைவாய்.

விடை பெற்று வந்த பிள்ளை வேலைப் பொறுப்புக்களை முறையாகச் செய்துவிட்டு விரிவாகக் கடிதம் எழுதக் காத்திருந்த வேளை கண்ட கனாக் கூடாது என்று தொலைத் தொடர்பு கொண்டு அம்மாவின் சுகம் அறிந்தீரா என்று துணைவியிடம் வினவ கடந்த வாரம் கதைத்தோம் சுகமாக உள்ளார் என்ற சொற்கேட்டுத் தொடர்ந்து வந்த இரண்டாம் நாள் துயின்ற பின் மீண்டும் இரவில் ஒரு கனா அம்மா தன் சுற்றத்து உறவுகளுடன் துக்க வீடொன்றில் இருப்பதாக திடுக்கிட்டு விழித்தெழுந்து துக்க வீட்டுக் கனா நல்லது தானே என்று மனம் தேறி இருக்கையிலே மாலையில் செய்தி சொன்னார் மகனார் தொலைபேசியில் உம் சிவலோக யாத்திரை பற்றி நற்பயணம் செல்கின்றேன் சிவலோகம் என்று நீர் உணர்த்த வந்த கனா அது என்று புரிந்து கொண்டவன் உம் புதல்வன் உன்னதமான உத்தராயண மாசித் திங்கள் வளர்மதி பன்னிரண்டில் பூச நட்சத்திரம் பொலிந்த நன்நாள் மேற்கொண்டீர் சிவலோக யாத்திரை சித்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்காது சிறப்பாக வாழ்ந்திடுவீர் வாழ்த்துகின்றேன் உள்ளம் நிறைந்து என்று உணர்த்திவிட்டீர் அக்கனவில் ஆதி சிவன் அம்சமாம் ஆதி சங்கரரும் பற்று விட்டாலும் அத்தனை காரியம் அன்னைக்குச் செய்து அதிசயித்து உலகோர்க்கு அறிய வைத்தீரா அம்மா, அருமை மணித்தீவின் நாயகியே நாகபூசணியே அம்மா உனை அடைந்து விட்டார் உன் உறவில் உலகுக்கே அன்னையானவள் ஆதி பராசக்தியே

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்

ஆயிரம் பிறை கண்டு அபூர்வமுடன் சீராக வாழ்ந்து சிரஞ்சீவியாகிவிட்ட மணித்தீவின் மாதா மகேஸ்வரியே சாயீசன் பஜனையிலே உன் நாமம் கேட்டு உள்ளம் நிறைந்து சாந்தி பெற்றிடுவோம் கேட்கும் வரம் தந்திடும் தாயே பராசக்தியே.

திர்யம் பகம் யஜாமஹே!
ஸுகந்திம் புஷ்டிவர்த்தனம்
உர் வாருக மிவ பந்தனாம்
ம்ருத்ஜ்யோர் மூக்ஷிய மாம் ருதாத்!!

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

## மக்கள் புலம்பல்

இதயம் கொண்ட இல்லாளன் இறைவனடி எய்திவிட
இளமையெனும் பூங்காற்றை எமக்காகப் பறக்க விட்டாய்
வறுமையிலும் சிறக்க வைத்தாய்,
உன் வாழ்வினையே எமக்களித்தாய்
முழுமை பெற்ற நிலவினிலே
மூச்சிரைக்கக் கிடுகிளைத்தாய்
இலக்கணங்கள் காணாத இன்பவல்லத்தாயே
உன், மலக்கரத்தை தேடி உந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் கதறுதம்மா, மறுபிறவி என்றதொன்று
எமக்கெல்லா முண்டென்றால்
மறுபடியும் உன்மடியில் மழலைகளாய் பிறந்து வந்து
மாசற்ற உனதன்பில் மகிழ்ந்தெழுந்து திளைப்போமே.

## மகனார் புலம்பல்...

உதிரத்தில் உயிர் கொடுத்து உள்ளத்தில் எனை வளர்த்து
அதிரத்தில் தினந்தோறும் அன்பு எனும் உணவளித்து
கருவுற்ற நாள் முதலாய் கருணையுள்ள தாயாகி, என்றும்
உருவத்தில் நான்காணா தந்தைதனின் உணர்வளித்தும்
பற்பலவும் நான்பயில பாடமெல்லாம் சொல்லி வைத்தும்
படுக்கையிலே நான் கிடக்கப் பக்குவமாய் மருந்து தந்தும்
தளிர்கரத்தின் அணைப்பினிலே நீ காத்து வந்த குஞ்சு இன்று
தள்ளாடிப் போனதம்மா தன் தாயின் முகம் காணாமல்.

வைத்திய கலாநிதி
குமாரவேலு குமாரசூரியர் .M.D

## எங்கள் அன்புக்கினிய அப்பம்மா,

சாந்தமான உங்கள் அன்புச் சிரிப்பினால் எங்கள் மனதைக் கவர்ந்த அருமைப் பாட்டி, தனித்த ஒரு பெண்ணாக இருந்து நீங்கள் பெற்ற செல்வங்களை வளர்க்க எப்பெரும் பாடுபட்டிருப்பீர்கள் என்று எங்களால் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாது.

உங்கள் சாந்தமான, எளிமையான வாழ்க்கை பேரப்பிள்ளைகளாகிய எங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு. உங்கள் வாழ்க்கையை எங்கள் இலட்சியமாகக் கொண்டு வாழ்வோம். உலக மக்களுக்கு அன்பைக் காட்டி அன்பைப் பெற்ற அன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரேசாவிற்கும், காலம் எல்லாம் தன் குழந்தைகளுக்காகவும், பேரப்பிள்ளைகளுக்கவும் வாழ்ந்த உங்கள் அன்பிற்கும் எந்த ஒரு வித்தியாசமும் இல்லை.

உங்கள் வயது முதிர்ந்த காலத்தில் எங்களால் உங்களை அருகில் இருந்து பார்க்காவிட்டாலும் உங்கள் தூய்மையான அன்பு எங்களை என்றும் உங்கள் இதயத்திலேயே வைத்திருந்தது. எத்தனை கோடி விலை கொடுத்தாலும் உங்களை இந்த மண்ணில் நாங்கள் காணமுடியாது. இனி எந்தப பிறவியில் காண்போம், அதையும் அறியோம்.

நீங்கள் தெய்வமாகி இன்று இன்னும் எங்கள் அருகில் வந்து விட்டீர்கள். நினைக்கும் பொழுது எல்லாம் உங்கள் ஆசியும், அன்பும் எங்கள் அனைவருக்கம் கிடைக்க அன்புடன் வேண்டுகின்றோம்.

அன்புடன்
பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

நாட்டிய அன்பி னோடு
நமதரும் உயிராய் நின்று
கூட்டிய தளர்வி னாலே
குவலயம் நீத்த காலை
காட்டிய பரிவி னோடு
காசியக் கடமை யீற்றாய்
நீட்டிய நிறைவுக் கையை
நெஞ்சத்தால் நினைவு கூர்வோம்
உற்றவர் உறவாய் உள்ளோர்
உடன் துணையாக நின்றோர்
மற்றெமை நெருங்கி வந்து
மனத்துறு பரிவு சொன்னோர்
கற்றுயர் கல்வி யாளர்
கருதிடும் வைத்தி யர்கள்
பற்றிடும் கூட்டுத் தாபனம்
பரிந்துயர் பள்ளி பலவும்
மாலை கள் சூட்டி னோர்கள்
மலர்வளை வைத்த அன்பர்
வேளையில் கண்ணீ ருதிர்த்து
விளம்பினோ ரஞ்சலிகள்
தானையே யடைய வேண்டித்
தந்திகள் தந்தோ ரின்னும்
ஆலையில் கரும்பாய் நிற்க
ஆறுதல் தந்தோர் நெஞ்சம்
அனைவருக்கு மெங்கள் நன்றி
அளிக்கின்றோம் உள்ளம் நெகிழ்ந்து.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது,
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ் - நல்லூர். 077 7222524